விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, சித்திரை 26 உ. வியாழன் (8-5 69) மலர் 20 புத்தகம் 23 இதழ் 21


மில்க்வைற்
மெடிகேடெட் வாசனை சோப் - நீல சோப்


ஆரோக்கியத்திற்கு
ஆடைகள் சுத்தத்திற்கு
உள்நாட்டு உற்பத்திக்கு அளிக்கும் ஆதரவு, நாட்டின் பொருளாதார விருத்திக்கு அளிக்கும் ஆதரவாகும்.


## "முழுப் பூசனிக்காயை இலைச்சோற்றில் மறைக்கிறார் அமைச்சர்

# இந்துக்களுக்கு எதிராக 100 வீதம் பாரபட்சம்"

## விவேகானந்த சபை பிரமுகர் விளக்கம்!

"வட இந்தியாவுக்கு யாத்திரை செய்யும் பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் ஒதுக்கப்படும் பண விஷயத்தில் அரசாங்கம் காட்டி வரும் பாகுபாடு திட்டமிடப்பட்டு நீண்டகாலம் நடைபெற்று வரும் ஒரு சூழ்ச்சியாகும். இந்த பாகுபாட்டை நீக்கும் படியும், வடஇந்தியாவில் 30 நாட்களுக்குமேல் இந்துக்கள் தங்கியிருக்க வேண்டும் என்றும் எந்த முக்கியமான இந்து சங்கமும் அரசாங்கத்துக்கு சுட்டிக்காட்டவில்லை என்று உதவி நிதியமைச்சா அண்மையில் பாராளுமன்றத்தில் கூறி பிரச்சினையைத் தட்டிக் கழித்திருக்கிறார். இது முழுப்பூசனிக்காயை ஒரு பிடி சோற்றுள் மறைக்க முயன்ற செயலாகும். உண்மையில் கொழும்பு

(9ம் பக்கம் பார்க்க)

## டட்லி ஆட்சியில் தோட்டி வேலையும் தமிழனுக்கு கிடையாது!

டட்லி அரசாங்கத்தில் தோட்டி வேலை கூட தமிழ் பிரஜைக்கு கிடைப்பது துர்லபமாகி விட்டது. சிறுபான்மை மக்களுக்கு வேலை, தொழில் வாய்ப்புக்கள் வேண்டுமென்று புறக்கணிக்கப்பட்டுக் கொண்டே வருகின்றன.

அண்மையில் திருமலையிலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தோட்டி வேலை செய்வதற்கு பல இடங்கள் காலியாக ஏற்பட்டனவென்றும், அதற்குக் கூட உள்ளூரில் உள்ளவர்கள் தெரிவு செய்யப்படாமல் தென்னிலங்கையிலிருந்து சிங்களவர்கள் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டதாகவும் தெரிகிறது திருமலையைச் சிங்கள மயமாக்கும் திட்டமும் இதில் கலந்திருப்பதாக கருதப்படுகிறது.

## காங்கேசன்துறை முக அபிவிருத்தி வேலைகள்

# புறக்கணிப்பு!

## ஒதுக்கப்பட்ட 20 இலட்சமும் செலவு செய்யப்படாததேன்?

காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்கென 66-67ம் நிதியாண்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 20 இலட்சத்தில் ஒரு சதம் தானும் அபிவிருத்தி வேலைகளுக்கு செலவு செய்யப்படவில்லை. இந்த விபரம் 66-67ம் நிதியாண்டிற்கான கணக்குப் பரிசோதகர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 5வது தொகுதியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த நிலைமை ஏற்பட யார் காரணம்? தமிழ்ப் பகுதி அபிவிருத்தியில் அர

(9ம் பக்கம் பார்க்க)


இப்பொழுது விற்பனையாகிறது

புதுமைலோலன் எழுதிய

தடுப்புக் காவலில் நாம்

அன்பு மகள் அன்பரசிக்கு சுதந்திரனில் எழுதிய மடல்களின் தொகுப்பு.

விலை ரூபா 2. 00 (வி. பி பி. கவனிக்கப்படும்)

விற்பனையாளர்கள்:

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

அன்பு புத்தகசாலை,
72 D, பெரிய கடை யாழ்ப்பாணம்.

கொழும்பில் கிடைக்குமிடம்:
தென்னவன் நூலகம்,
செட்டித் தெரு கொழும்பு—11


## நல்லவர் மறைந்தார்!



பேரறிஞர் அண்ணாவின் இழப்பினால் ஏற்பட்ட துயரம் ஆறுமுன் இந்தியஜனாதிபதி டாக்டர் சாகிர் ஹுசேனும் இந்திய மக்களையும் உலக மக்களையும் கவலையில் ஆழ்த்தி விட்டு தமது 72 வயதில் மறைந்து விட்டார். இந்தியக் குடியரசின் முதல் முஸ்லிம் குடிமகனின் மறைவுச் செய்தி கேட்டு கலங்காத உள்ளம் இருக்கவே முடியாது.

இத்தகைய ஒரு பேரிடி ஏற்படுவதற்கு அறிகுறியாகத்தான் இந்திய தேசிய காங்கிரசின் மாநாட்டுப் பந்தல் அண்மையில் தீப்பற்றியெரிந்திருக்கிறது போலும்.

இந்து வெறியர்களைக் கூட தன்னுடைய அன்பாலும் பண்பாலும் வெற்றி கொண்டு, 1967ம் ஆண்டு மே மாதம் ஜனாதிபதிஸ்தானத்துக்கு தெரிவு செய்யப்பட்ட முதல் முஸ்லிம் தலைவர் இவர். இரண்டாவது

(9ம் பக்கம் பார்க்க)

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது தொடர்கதை

# எங்கே நீயோ

## நானும் அங்கே உன்னோடு

அத்தியாயம் (17)

"பெண்ணாகப் பிறப்பதும் பாவம் பெண்ணோடு கூடிப் பிறப்பதும் பாவம் என ரகு கேள்விப்பட்டிருந்தான். அது எதற்காகக் கூறப்பட்டது என அவன் இதுவரை ஆராய்ச்சி செய்ய வில்லை. ஆனால் நிர்மலாவைக் காத்துக்கொண்டுநின்ற இந்த சொற்ப நேரத்துக்குள் அப்படியொரு ஆராய்ச்சி அவன் மனதில் எழுந்து அதற்கு ஒரு விளக்கமும் கொடுக்கப்பட்டது. இந்தப் பெண்கள் படும் பிரசவ வேதனையைப் பார்த்த ஒருவன்தான் இப்படியொரு பழமொழியை உண்டாக்கியிருக்க வேண்டும் என அவன் மனந்துணிந்தது. அவனுக்கு இடையில் கிடைத்தஒரு பெண் சகோதரத்தின் பிரசவவேதனையே இவ்வளவு கவலையைத் தருவதாக இருந்தால் பவானியின் கணவன் மட்டும் அங்கு நின்றிருந்தால் அவன் மனம் இந்த மூன்று மணி நேரமும் என்ன பாடுபட்டிருக்கும் எனச்சிந்தித்தான். இதுவரை பவானிக்கு ஆண்பிள்ளைதான் பிறக்கவேண்டும் என்ற இறுமாப்பிலிருந்தவன் இப்போது என்ன குழந்தை பிறந்தாலுஞ் சரி என்ற நிலைக்கும் வந்துவிட்டான். பெண்குழந்தையென்ருல் பரவாயில்லை என்று கூட நினைத்தான்; ஆண்பிள்ளையாக இருந்தால்தான் கடந்த மூன்று மணி நேர முப்பட்ட சித்திரவதையை அந்தக் குழந்தையும் படவேண்டி வருமே என்ற வேதனை அவனுக்கு.

"உங்கள் தங்கச்சிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கு. சீக்கிரம் சென்று எங்களுக்குக் கற்கண்டு வாங்கி வாருங்கள் என்று நிர்மலா கூறிய பின்பு தான் ரகு இந்த உலகத்திற்கு வந்தான். நிர்மலா கூறிய செய்தி அவனுக்குக் கற்கண்டைவிடக் கூடுதலாக இனித்தது. ஒரு கணப்பொழுது அவன் தன்னையே மறந்தான். முற் கூட்டியே இடது கைப்பக்கச் சட்டைப் பையில் வைத்திருந்த கற்கண்டில் சிறு துண்டை எடுத்து நிர்மலாவின் வாய்க்குட் திணித்துவிட்டான். அதன் பின்புதான் அவனுக்குத் தான் செய்தது தவறு என்று புரிந்திருக்க வேண்டும்!

"என்னை மன்னித்து விடுங்கள் அளவுகடந்த மகிழ்ச்சியில் தெரியாத்தனமாக ஏதோ நடந்த விட்டது என்று கூறியபின்புதான் நிர்மலாவுக்கும் அது தவறு என்பது புரிந்திருக்க வேண்டும். அது தவருக இருந்தாலுங் கூட அந்த செய்கை அவளுக்குப் பிடித்திருந்தது. அவள் கூட எதிர்பாராத வகையில் நடைபெற்ற ஒன்றுதானயினும் அவள் உள்ளத்துக்கு இதமாக இருந்த செய்கையது. "பரவாயில்லை" என்று தான் கூறிவிட நினைத்தாள். ஆனால் தன் பலயீனத்தை அவன் அறிந்துவிடக் கூடாது என்ற ஒரு ஆதங்கத்தில் 'நல்லகாலம் அக்கம் பக்கம் யாரும் நம்மை அவதானிக்கவில்லை' என்று பட்டும் படாமலும் கூறிவிட்டு அப்பாற் சென்ருள் அவள்.

ரகு சில நிமிடநேரம் தன் என்சாண் உடம்புங் கூனிக் குறுக எதுவும் செய்யுந் திராணியற்று வெட்கிப் போய் நின்ருன். பெண்களையே ஏறிட்டு நோக்க வெட்கப்படும் அவன் இவ்வளவு துணிகரமான செயலை எப்படிச் செய்தான் என்று அவனுக்கே புரியவில்லை. அவனைப் பொறுத்தவரையில் நிர்மலா மீது தான் வைத்த அன்பினுலோ ஆசையினுலோ அவன் அப்படியொரு அருவருக்குஞ் செயலை செய்யவில்லை; தன் வாழ்க்கையில் அவன் ஒருபோதும் நல்லவற்றை எதிர்பார்ப்பதில்லை. அப்படி எதிர் பார்த்து ஏமாற்றம் அடைவதைவிட எதிர்பாராமல் எது வந்தாலும் அதைத் தாங்கிக் கொள்வது சுலபம் என்ற கொள்கையுடையவன் அவன். அதனுல் பவானிக்கு முதற் குழந்தை ஆண் குழந்தையாகவே பிறக்கவேண்டும் என்ற ஆசை அவனுக்கு நிறையஇருந்தபோதும் பெண் குழந்தைதான் பிறக்கும் என்ற நம்பிக்கையோடிருந்தான். எதிர்பாராதவிதமாகத் 'திடீர்' என நிர்மலா வந்து பவானிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு என்று கூறியதும் அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒரு சொற்ப நேர உணர்ச்சி அவனைப் பலபடிகள் கீழே தள்ளிவிட்டிருந்தது.

நிர்மலா தன்னைப் பற்றி எவ்வளவு கேவலமாக நினைத்திருப்பாளோ என நினைத்து அவன் நெஞ்சம் ஏங்கியது. தான் அடைந்த மகிழ்ச்சி அத்தனையும் இந்த ஒரு அற்பச் செயலால் அற்றுப்போக நிர்மலாவின் முகத்தில் எப்படி விழிப்பது என்று அவன் சிந்தித்துக்கொண்டு நின்ற போது "கொன்கிறஜுலேஷன்ஸ் ராமு... உன் தங்கைக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்திருக்கு. இன்னும் சிறிது நேரத்தில் நீ சென்று பார்க்கலாம் என்று அவ்வழியாக வந்த டாக்டர் ராஜன் கூறிக்கொண்டே அவனைத் தாண்டிச் சென்ருர்.

அதன்பின்பு கூட ரகுவுக்கு அந்த இடத்தைவிட்டு அசைய முடியவில்லை. ஒரு பெண்ணின் வெறுப்புக்குத் தான் ஆளாகிவிட நேருமோ என்ற பயம் அவனை வாட்டியது. ஆயினும் நிர்மலா தன்னை மன்னிப்பாள் என்றவன் அந்தராத்மா கூறிக்கொள்ள பவானியின் குழந்தையைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆசை துடிதுடிக்க அவன் அமைதியற்று நின்ருன். "அப்போது உங்கள் மருமகனை நீங்கள் சென்று பார்வையிடலாம்" என அவனிடம் வந்து கூறிவிட்டு அப்பால் நகர்ந்தாள் நிர்மலா.

அவள் போகும்வரை மௌனமாக நின்ற ரகு "ச்சா வந்தவளிடம் இன்னுமொருமுறை மன்னிப்புக் கோரியிருக்கலாம். ஒரு நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிட்டமாதிரி." என்று மனதுக்குள்ளாகவே பேசிக்கொண்டு பல நாட்கள் காத்திருந்த புதையலை எடுக்கப்போகும் ஒருவனின் மனநிலையில் பவானியின் அறையைநோக்கி நடந்தான். வாசல்வரை வேகமாக நடந்தவன் அறைக்குள் கால்வைக்கத் தயங்கினுன். பிள்ளைப்பேற்றின் பின் முதல்முதல் பவானியைச் சென்று பார்க்க அவனுக்குச் சங்கோசமாக இருந்தது. இருந்தும் குழந்தையைப் பார்க்கும் துடிப்பு அதிகரிக்கவே அவன் கால்களைப்பின்னிப் பிணைவித்து ஒருபடியாக அறைக்குட் பிரவேசித்து விட்டான். பவானி கட்டிலில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். பக்கத்தில் ஒரு வெள்ளைத்துணியில் சுற்றுப்பட்டுத் தலையும் முகமும் மட்டுந் தெரியக்கூடியதாகக் குழந்தை வளர்த்தப் பட்டிருந்தது.

அவன் கட்டிலின் அருகில் மிக நெருக்கமாகச் சென்று பவானியைப் பார்த்தான். அவன் பக்கத்தில் நிற்பது கூடத் தெரியாமல் அவள் களைத்து அயர்ந்த நிலையில் கிடந்தாள். பக்கத்தில் கண் மூடிப்படுத்திருந்த குழந்தையைச் சில நிமிடநேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான் ரகு. அந்தக் குழந்தையை அப்படியே வாரித் தூக்கிக்கொள்ளவேண்டும் போல இருந்தது அவனுக்கு. ஆனால் அது பச்சைக் குழந்தையாக இருந்தாலும் இதற்குமுன் அப்படியான குழந்தைகளைத் தூக்கிப் பழக்கமில்லாததாலும் அவன் அதைத் தூக்கப் பயப்பட்டான். ஆயினும் அதன் பட்டுமேனியைத் தன் கைகளாற் தடவிக்கொடுத்தான். அந்த ஸ்பரிசம் அவனுக்கு இன்பத்தைக் கொடுக்க அவன் அங்கமெல்லாம் பூரித்தது.

அந்தக் குழந்தையை மூடியிருந்த மெல்லிய வெள்ளைத் துணியைவிலக்கிவிட்டு அவன் அந்தக் குழந்தையைத் தலையிலிருந்து கால்வரை பார்க்கிருன். அதன் உடலை அலங்கரித்திருந்த அழகிய வெள்ளைநிற நைலான் சட்டை [illegible] போன்ற அதன் தளிர் விரல்களை அவன் விரிக்கும் போது அந்தக் குழந்தை விம்மிக் கொள்கிறது. அப்போது தக்காளிப் பழம் போன்றிருந்த அதன் கன்னங்கள் சிவப்பு ரோஜாவாக மாறிக் கொள்கின்றன. அதைப் பார்த்து அவன் இதழ்கள் மலர்கின்றன. இப்படியே அவன் தன்னை மறந்த நிலையில் அந்த குழந்தையோடு ஒன்றி விட்டிருக்கும் போது அந்த அறைக்குள் சப்பாத்துச் சத்தங் கேட்க நிமிர்கிருன். அவன் பக்கத்தில் நிர்மலா நிற்கிருள். 'ஓ.. பவானிக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லையாக்கும்... எழுப்பட்டுமா .. என்று அவள் அவனைப் பார்த்துக் கேட்கும் போது வேண்டாம் என்பதற்கறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்துக் கொள்கிருன் அவன்.

'எப்படியிருக்குருன் உங்கள் மருமான்...? என்று அவளே மீண்டும் பேச்சைத் தொடங்கி விட்டு குழந்தையை இரண்டு கைகளிலும் எடுத்து அவனிடம் நீட்டுகிருள். அவன் குழந்தையை வாங்கிக் கொள்ளத் தயங்கியபடி பின்னேக்கி அடியெடுத்து வைக்கும் போது...' பரவாயில்லை... பிடித்துக் கொள்ளுங்கள். ஏன் இவ்வளவு பயப்படுகிறீர்கள். நாளைக்கு உங்களுக்கும் ஒரு பையன் பிறந்தால் இப்படித் தான்பயப்படப் போகிறீர்கள். அதனுல் தங்கச்சியின் பிள்ளையிலேயே பழகிக் கொள்ளுங்கள் என அவள் கூறும்போது அவன் சங்கோசத்துடன் அவளைப் பார்க்காமலே தன் கைகளை நீட்டிக் கொள்கிருன். 'கவனம் மெதுவாக... உம் தலையில் ஒரு கையைப் பிடியுங்க... அவள் கற்பித்துக்கொண்டே குழந்தையை அவனிடம் கொடுத்து விடுகிருள் இவ்வளவு பயமும் சங்கோசமும் உள்ள ஒருவன் தானு எனக்குச் சற்றுமுன்பு கற்கண்டு ஊட்டினுர் என நினைத்துப் பார்க்கத் தோன்றுகிறது அவளுக்கு.

நிர்மலா ஏதாவது நினைத்து விடப் போகிருளே என்ற பயத்தில் குழந்தையை வாங்கிக் கொண்ட ரகுவுக்கு கையுங் காலும் நடுங்கிக் கொண்டது. அவன் பிறந்து வளர்ந்த இத்தனை நாளைக்கும் எந்தக் குழந்தையையும் தூக்கிப் பழக்கமேயில்லை. அதனுல் திரும்பவும் குழந்தையை வளர்த்திவிட அவன் துடித்தான், அதை எப்படியோ அவதானித்துக் கொண்டநிர்மலா அவனிடம் இருந்து குழந்தையைப் பெற்றுக் கொண்டாள். அவள் கண்கள் அந்தக் குழந்தையின்மேலேயே பதிந்திருந்தன. சிறிது நேர நிமிடத்தின்பின் தன் கன்னத்தோடு பதியவைத்துக் கொஞ்சிவிட்டு மீண்டும் பவானியின் அருகில் வளர்த்திவிட்டு பவானி' என்றழைத்தாள் அந்தக் குரலை பவானி கேட்டதாகத் தெரியவில்லை. ஆகவே அவள் மீண்டும் 'பவானி' என்றழைத்தாள் இம்முறை அவள் சற்றுப் பலமாக அழைத்ததால் பவானி மிகுந்த சிரமத்துடன் கண்களைத் திறந்தாள். அதுவரை நிர்மலாவின் பக்கத்தில் நின்ற ரகு 'தங்கச்சி' என அழைத்தான் இம்முறை பவானி சற்று விழிப்புடன் அசைந்து கொண்டபோது அவள் முகத்தில் ஒரு ஒளி வீசியது.

'தங்கச்சி' என்று இரண்டாம் முறையாக பவானியின் காதருகில் குனிந்து அழைத்தான் ரகு அப்போது தான் பவானி அவனை நன்ருகப் பார்த்தாள். அவள் முகத்தில் ஒரு புன்னகை மிளிர்ந்தது. அந்தப் புன்னகை நான் என் கடமையைச் சரியாகச் செய்து விட்டேன் என்று கூருமற் கூறியது. தங்கச்சி உனக்குப் பையன் பிறந்திருக்கிருன்... உன்னையே உரித்து வைத்திருக்கு...' ரகு தன் மகிழ்ச்சியை அடக்க முடியாமல் கூறியதைக் கேட்டுப் பவானி அடக்கமாகச் சிரித்துக் கொண்டாள் அவர்கள் இருவர் மகிழ்ச்சிக்கு இடையில் தான் குறுக்கே நிற்கக் கூடாது என்ற பெருந்தன்மையோடு நிர்மலா அவ்விடத்தை விட்டு அகன்ருள். தங்கச்சி உன் பையனுக்குப் பெயர் வைக்கணும் என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்திருக்கிருயா அல்லது நானே வைத்துவிடட்டுமா? நீமட்டும் இரண்டு நாட்களுக்கு முன்பு உன் கணவன் பெயரைக் கூருது விட்டிருந்தால் இந்தப் பொடிப் பயல் அப்பன் பெயர் தெரியாத குழந்தையாகவே இருந்திருப்பான். அந்தவகையில் நான் மட்டுமல்ல உன் பையன் கூட உனக்கு நன்றியுடையவனுக இருக்க வேண்டும். ஆமாம உன் பயலுக்கு என்ன பெயர் வைக்கட்டும்...?

பவானி மீண்டும் அதே தோரணையிற் சிரித்துக் கொண்டாள். அந்தச் சிரிப்பின் அர்த்தம் அவனுக்கே புரியாமல் இருந்தது. சட்டத்திற்கு விரோதமாக ஒரு உயிரைப் படைக்கஅவளுக்கு எந்த உரிமையும் இல்லாத போது நன்றி வேறு கூற வேண்டுமா என்ற விரக்தி மனப்பான்மையாகவுமிருக்கலாம். அதுவரை மௌனமாக இருந்த அவள் உலர்ந்து ஒன்றுடன் ஒன்று ஒட்டிப் போயிருந்த தன் உதடுகளைத் திறந்து 'உங்கள் வேண்டுகோட்படி" உங்களுக்கு ஒரு மருமகனைப் பெற்றுத் தந்து விட்டேன். இனி அவனை வளர்த்து அவனது நன்மை தீமையாவற்றிலும் பங்கெடுக்க வேண்டிய பொறுப்பு தங்களைச் சார்ந்ததாகும். ஆகவே அவனுக்கு நீங்களாகவே பொருத்தமான பெயரைச் சூட்டுங்கள் அண்ணு" என்று அந்தச் சிரிப்பினூடே அவள் கூறிய போது அவள் கண்களில் இருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது.

அவள் அழுகை ரகுவுக்கு ஆச்சரியமாக இருக்கவில்லை. அவன் பவானியைப் பார்க்க வரும்போதே அந்த அழுகையை எதிர்பார்த்தான். ஆனல் அவள் அழவில்லை; ஆயினும் அவள் எந்நேரத்திலும் அழலாம் என அவன் எதிர்பார்த்தான். அது இப்

(11-ம் பக்கம் பார்க்க)

பா. பாலேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேட்டுப்பாருங்கள்?

## திருவாளர் குயுக்தி

சேணியூர்நலம்
நெடுங்கேணி.

கே: அடுத்த பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சியில் வவுனியா தொகுதிக்குயார் போட்டியிடப் போகின்றார்?

ப: கட்சியின் வேட்பாளர் தெரிவுக்குழு அதுபற்றி இன்னும் முடிவு செய்யவில்லை!

ஃ

'ஈழதாசன்'
கைதடி.

கே: ஆச்சாரியகிரிசி சற்மிதரான்சி என்றபிக்கு சமஷ்டித் தலைவர்களைத் துரோகிகளென்றும் அவர்களை இந்நாட்டை விட்டு உதைத்துத்தள்ள வேண்டுமென்றும் பேசியிருக்கிறாரே. இத்தகைய பிக்குகளைத் திபெத்தில் சீனு செய்தது போலச் செய்யவேண்டுமென்று எனது நண்பன் கூறுகிறான் உங்கள் கருத்தென்ன?

ப: இத்தகைய பிக்குகளுக்கு சனநாயக வழியில் பதிலளிப்பதையே நான் வரவேற்கிறேன் — அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ்ப் பகுதியின் சகல தொகுதிகளிலும் தமிழரசுக்கட்சி பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்புவதே வாய்க்கொழுப்புள்ள இத்தகைய பிக்குகளின் முகத்திலறைவதாக இருக்கும்!

ஃ

சி. குமாரவேல்
ஓமந்தை.

கே: நேர்மையாக வாழ்வதற்குச் சிறந்தவழி எது?

ப: பொய் சொல்லாமல் விடுவது.

ஃ

எம். பிரபாகரன்,
இணுவில்.

கே: இன்றைய தமிழனுக்கு வீரம் எப்போது பிறக்கிறது?

ப: எம். ஜி. ஆர். படம் பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்ததும்!

ஃ

கே. ஆனந்தன்
கந்தரோடை

கே: தமிழுக்கு சம அந்தஸ்து பெற்றுத்தர இயலாது; தமிழருக்குசமசந்தர்ப்பம் பெற்றுத் தருவோம் என்கிறாரே வி. பொன்னம்பலம்? -

ப: மொழிக்குச்சமவுரிமையின்றி அம்மொழி பேசும் மக்களுக்கு சம சந்தர்ப்பம் எப்படி ஏற்படமுடியும்? சிங்களவர்கள் தமிழைக்கற்க வேண்டிய கட்டாயமெதுவுமின்றி தங்கள் தாய்மொழி அறிவுடன் அரசாங்கசேவையிலீடுபடும்போது, தமிழர்கள் சிங்களம் படித்து சிங்களத்தில் மட்டுமே அரசாங்க வேலைகளை ஆற்றவேண்டுமென்பதுதானே கூட்டுக்கட்சிகளின் வரட்டுக் கொள்கை? இதுதான் வி—பொன்னரின் சமசந்தர்ப்பமா?

ஃ

முருகுப்பிள்ளை,
தாழங்குடா.

கே: வருங்காலத்தைப் பற்றி அதிகம் கவலைப்படுபவர்கள் ஆண்களா அல்லது பெண்களா?

ப: பெண்கள்,

கே: இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: மனிதன் இறைவனைப் படைத்துள்ளது போல் இறைவன் தனக்கொரு இறைவனைப் படைக்காதது!

ஃ

கே. இராமநாதன்
கொழும்பு:

கே: டட்லி அரசாங்கத்தின் ஒரு முற்போக்கு நடவடிக்கையை கூறுங்கள் பார்க்கலாம்?

ப: மே மாதம் கொண்டாடப்படவேண்டிய மேதின விழாவை ஏப்பிரல் கொண்டாடியது 'முற்போக்கு' அன்றிப்பிற்போக்கா?

கே: டட்லி தலைவர் தானே!

ப: ஆனால் [illegible] இல்லையே!

ஃ

எஸ். ராஜதுரை
நல்லூர்:

கே: அந்தக் காலத்துப் பெண்ணுக்கும்இந்தக் காலத்துப் பெண்ணுக்கும் உள்ள வித்தியாசமென்ன?

ப: அந்தக்காலத்துப்பெண் கணவனை அநீதியாக கொலை செய்த அரசனிடம் சென்று நீதிகேட்டாள். இந்தக் காலத்துப் பெண்ணோ கணவனுக்காக நஷ்டஈட்டுத் தொகை கேட்பாள்!

கே; கற்பு என்றால் என்ன?

ப: கொழும்பில் மிகமலிவான விலைக்கு கிடைக்கும் ஓர் பொருள்!

ஃ

பொ-கலைச்செல்வி,
ஏழாலை மேற்கு.

கே: தமிழரசுக் கட்சியின் நேர்மையான அரசியல் போக்கைப் புரிந்துகொண்டும் சிலர் தூற்றிக்கொண்டிருக்கிறார்களே, அதைப் பார்த்துக்கொண்டு ஏன் தமிழரசுக் கட்சி வாழாவிருக்கிறது?

ப: அப்படிப்பட்டவர்களை மக்கள் கவனித்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையினால்!

கே: தமிழரசு மாநாட்டிற்கு கூடிய மக்கள் கூட்டத்தை ஜீ. ஜீ. பார்த்திருந்தால்...?

ப: நாடி விழுந்திருக்கும்!

ஃ

ஐ. நடேசன்,
நெல்லியடி.

கே: தமிழரசார் அரசாங்கத்திலிருந்தபோது காங்கிரசார் மீது 'இலஞ்ச ஊழல் குற்றப்' இருப்பதால்தான் தமிழரசு வெளியேறவில்லையென்று கூறினார்கள். தற்போது காங்கிரசார் அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டு [illegible] மாக இருக்குமோ?

ப: பொன்னம்பலத்திடமும் சிவசிதம்பரங்களிடம் இக்கேள்வியைப் போடுங்கள்!

கே: எங்கள் உடுப்பிட்டித் தொகுதியில் தமிழரசு மாநாடு நடத்தினால்...?

ப: அரைச் சபாநாயகரின் 'கோட்டை' தூள் தூளாகும்!

கே: ஜீ ஜீ.யாரின் தொழிற்சாலை அமைப்பு என்னாச்சு?

ப: 65 தங்கப்பவுண் மோதிரத்திலிருந்து உருவாக்கப்படப்போவதாக கூறப்பட்ட அந்த தொழிற்சாலைதானே...! அது இப்போது ஏன்? தமிழ் காங்கிரசுக்கு சமாதிகட்ட ஒரு சவக்காலை அல்லவா தேவை?

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194 ஏமன் ராநாயக்க வீதி,
கொழும்பு-12.

# வாசகர் கருத்து

தமிழரசு மாநில மாநாட்டைப் பற்றிய கோவை மகேசனின் உணர்ச்சி மிகுந்த கட்டுரை மிக நன்றாக இருக்கிறது. அண்ணாவையும் பாரதியையும் பற்றி எழுதியவை கண்ணீரைச் சொட்ட வைத்துவிட்டன.

—உ.இ. தமிழ்ச் செல்வன்.
யாழ்ப்பாணம்.

எழுச்சியை ஏற்படுத்திய 3 நாட்கள் கட்டுரையை எழுதிவரும் அன்பருக்கும், எரிக்கரையாரின் இதோப தேசம் என்னும் அரசியல் மடலைத் தீட்டியவருக்கும் எனது உளங்கனிந்த வாழ்த்துக்கள்!
நாவல்நகர். —'அமிர்'

பா. பாலேஸ்வரியின் தொடர்கதை இதயத்தை தொடுகிறது. சமுதாயத்திலுள்ள ஊழல்களை கதாசிரியை சாடும் அழகே அழகு!
—ஏ. வல்லிபுரம்.
யாழ்ப்பாணம்.

சுதந்திரன் என்ன ஒரே அரசியலாக இருக்கிறதே? திரைவாணன் எங்கே காணோம்?
—சுப்பிரமணியம்.
மட்டுநகர்.

சுதந்திரனில் வெளிவரும் அரசியல் மடல் விறுவிறுப்பாக இருக்கிறது—தொடர்ந்து வெளியிடுங்கள்.
—கே. இராசையா.
திருமலை.

தமிழரசு மாநாட்டுக் கட்டுரையில் தமிழ்த் தினசரிகளுக்கு சாட்டையடி கொடுத்திருக்கிறீர்களே உங்களுக்கு அவற்றுடன் என்ன கோபம்?
—கந்தசாமி.
கொழும்பு.

# ஏன்தான் எமைவிட்டுப் பிரிந்தீரோ?

## திருமதி பங்கஜவல்லி மறைவுக்கு தமிழரசு மாதர் முன்னணி செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி இரங்கல்!

இலங்கைத் தமிழரசுக் கட்சி மாதர் முன்னணித் தொண்டர்களில் ஒருவரான திருமதி பங்கஜவல்லி பாலசுப்பிரமணியம் அவர்கள் நம்மை விட்டு அகால மரணம் அடைந்து விட்டார்கள். சாந்தம் தவழும் முகமும், புன்னகை பூத்த விழிகளும், இனிய வார்த்தைகளும் கொண்ட இவர் கட்சியின் இலட்சியப் போராட்டங்களிலெல்லாம் தன் பங்கைச் செலுத்தியதுமின்றிதன் தலைமையிலே தன்கிராமமாகிய திருநெல்வேலியிலிருந்து அநேகமனேகம் பெண் தொண்டர்களைச் சேர்த்த பெருமை இவரைச் சார்ந்தது.

தமிழரசுக்கட்சியின் போராட்டகாலங்களில் பெண்கள் கூடுதலாகப் பங்குபற்றிய பெருமை திருநெல்வேலிக்குத்தான் உண்டு. அதிலே முன்னணியில் நின்ற திருமதி பங்கஜவல்லி பாலசுப்பிரமணியம் அவர்கள் சத்தியாக்கிரகம்' சிறீ போராட்டம், கட்சி மாதர் முன்னணியின் இயக்கங்கள், இவற்றில் மட்டுமல்லாது தேர்தல் பிரசாரம் முதலியவற்றில் கூட ஊக்கம் காட்டி உழைத்தார்.

தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை வைத்து மாற்றுக் கட்சியினரோடு வாதாடி வெல்லும் திறமைமிக்கமாதர் முன்னணித் தொண்டராகவிளங்கினார். இவரை இழந்தது குறிப்பாகதமிழரசு மாதர் முன்னணிக்கும் சிறப்பாக தமிழ் பேசும் இனத்துக்கும் ஒரு பேரிழப்பாகும்.




திருமதி. பங்கஜவல்லி பாலசுப்ரமணியம்
2-2-1926 தோற்றம்
29-3-1959 மறைவு

''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க தோன்றி குடும்ப வாழ்வில் மட்டுமன்றி, தான் பிறந்த நாட்டிற்கும், மொழிக்கும் சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு உழைத்த பெண்கள்குல திலகம் இவர்.

இந்த மாதரசியை மறக்கவே முடியாது. கட்சியில் ஊக்கத்தோடு உழைத்த இவர் சேவையை நன்கு அறிந்தவர்கள்—அவர் பாடுபட்ட கொள்கையையும் இலட்சியத்தையும் வைத்து உழைக்க ஏனைய பெண்களும் முன்வரவேண்டுமென்று கேட்கின்றோம். அன்னாரை இழந்துதவிக்கும் அவரது குழந்தைகட்கும், அவர் அன்புக் கணவருக்கும், நண்பர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம்.

திருமதி.
—மங்கையர்க்கரசி
அமிர்தலிங்கம்
தமிழரசு மாதர் முன்னணி செயலாளர்.


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்
14 டாம் வீதி, கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# பிரதமரின் ஆஷாடபூதித்தனம்!

தமிழரசுக்கட்சி அரசாங்கத்தை விட்டுப்பிரிந்தாலும், அரசாங்கம் தொடர்ந்து தேசிய ஐக்கியத்தைக் கட்டிக் காத்து வருமென்றும் யூ. என். பியின் நோக்கமே தேசிய ஐக்கியத்தை உருவாக்குவதுதான் என்றும் தமது கட்சிக் கூட்டமொன்றில் பிரதமர் டட்லி சேனநாயகா வெற்றி வீரர் போல திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். தேசிய ஐக்கியம் என்னும் மாயாஜால வார்த்தையை உபயோகித்து தமிழ் பேசும் மக்களை மேலும் மேலும் ஏமாற்றிவரலாமென்று பிரதமர் கருதுவாரானால், அது பகற்கனவாகுமென்று முதலில் இங்கு அழுத்தமாக கூறிவைக்க விரும்புகிறோம்.

இந்நாட்டில் உண்மையான தேசிய ஒற்றுமை தோன்றுவதற்கு தமிழரசுக்கட்சியினரோ தமிழ் பேசும் மக்களோ என்றும் மாறுபட்டவர்களுமல்லர்; வேறுபட்டவர்களுமல்லர். ஆனால் தேசிய ஒற்றுமை என்று கூறிக்கொண்டே தமிழினத்தை ஒழித்துக்கட்டச் சிங்கள ஏகாதிபத்தியம் எடுக்கும் நடவடிக்கைகளைத் தான் கடுமையாக எதிர்த்துப் போராடி வருகிறார்கள்;

இந்நாடு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்றுவரை இந்நாட்டில் தமிழினத்தின் கழுத்தைஅறுப்பதற்குச் சிங்கள ஆட்சிகள் மாறிமாறி முயன்று வருகின்றனவே தவிர, எந்தச் சிங்களக் கட்சியாவது தமிழ் பேசும் மக்களும் இந்நாட்டுப் பிரஜைகள்; அவர்களுக்கும் அவர்களது அடிப்படை உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று கருதியதே கிடையாது.

யூ. என். பிக்குத் தமிழினத்தின் நலத்தில் சிறிதாவது அக்கறை இருந்திருந்தால், பத்து இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களின் பிரஜாவுரிமை, வாக்குரிமையைப் பறிக்கும் இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்க முடியாது. பெருவாரியான தமிழ்ப் பிரதேசங்களை திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் அபகரித்திருக்க முடியாது. சிங்களம் மட்டும் கொள்கையை ஆதரித்திருக்க முடியாது; பண்டா—செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராகக் கொடிய வகுப்புவாத விஷத்தைக் கொட்டியிருக்க முடியாது.

சுதந்திரக்கட்சியின் நிலையைப் பற்றி நாம் இங்கு குறிப்பிட்டுக் கூற வேண்டிய அவசியமேயில்லை. இந்நாட்டில் தமிழினத்தவர்கள் நாயினும் கீழாக நடத்தப்பட்டது சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தான் என்பதை எவரும் மறந்திருக்க மாட்டார்கள்.

சிறுபான்மை இனத்தை — அணைத்தோ எதிர்த்தோ — நிர்மூலமாக்கி விடுவதன் மூலம் இந்நாட்டில் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தைக் கட்டி எழுப்பி ''தேசிய ஒற்றுமையை'' காணவே சிங்களக் கட்சிகள் துடியாய்த் துடிக்கின்றன

ஒற்றையாட்சியின் கீழ்—தேசிய ஒற்றுமை என்று மாய்மாலம் பேசி தமிழ் மக்களை அடிமைகளாக்கி அழிக்கும் சிங்களக் கட்சிகளின் சூழ்ச்சிக்கு தமிழ் பேசும் மக்கள் இரையாக மாட்டார்கள் என்பதை பிரதமருக்கு மட்டுமல்ல, நாட்டிலுள்ள சகல சிங்கள அரசியற் கட்சிகளின் தலைவர்களுக்கும் தெட்டத்தெளிவாக கூறிவைக்க விரும்புகிறோம்.

உருத்திராட்சப் பூனை போல கண்ணை மூடிக் கொண்டு தேசிய ஐக்கியம் என்ற ஜெபமாலையை உருட்டிக் கொண்டிருப்பதால் தேசிய ஐக்கியம் மலர்ந்து விடாது என்பதை பிரதமர் உணரவேண்டும். 1965ம் ஆண்டு ஆட்சியமைக்க தமிழரசுக் கட்சியின் உதவி தேவைப்படாத அளவுக்கு யூ. என். பிக்கு பெரும்பான்மை பலம் கிடைத்திருந்தால், டட்லி சேனநாயகாவின் 'தேசிய ஐக்கியம்' எப்படி உருமாறியிருக்கும் என்பதை நாம் அறியாமலில்லை.

தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்கி சிறுபான்மை மக்களுக்கு எதிராகக் காட்டப்பட்டு வந்த பாரபட்ச நடவடிக்கைகளை நீக்கி- நாட்டில் சமாதானத்தையும் சந்துஷ்டியையும் ஏற்படுத்துவதற்கு கிடைத்த நல்ல சந்தர்ப்பத்தை நாசமாக்கி விட்ட பிரதமர் இனி எப்படி தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டப் போகிறார்?

''வாக்குறுதி கொடுக்கமாட்டேன்- கொடுத்தால் அவ்வாக்குறுதியை நிறைவேற்றியே தீருவேன்-நிறைவேற்ற முடியாதபட்சத்தில் பதவியிலிருக்க மாட்டேன்' என்று நாடெல்லாமறியச்கூறிய பிரதமர், தமிழினத்துக்கு கொடுத்த அத்தனை வாக்குறுதிகளையும் மீறிவிட்டு இன்னும் பதவியைக் கட்டிப்பிடித்துக் கொண்டு இருக்கிறார் என்றால், இவரது வார்த்தை ஜாலங்களில் இனியும் நம்பிக்கைவைப்பதற்கு தமிழ் பேசும் மக்கள் நிர்மூடர்களல்லர்.

ஒவ்வொரு பிரச்சினையிலும் தமிழினத்துக்கு அநீதியாகவும் பாரபட்சமாகவும் நடந்து கொண்டே தேசிய வேஷம் போடுவதால் தமிழ் பேசும் மக்களை ஏமாற்றிவிட முடியாது என்று பிரதமருக்கு அழுத்தமாகக் கூற விரும்புகிறோம்.

தமிழ்ப் படங்களைத் தடை செய்து இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான தமிழ் கலாசாரத் தொடர்புகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்பும் சிங்கள இன வெறிக்கு தேசிய அரசாங்க அமைச்சரான டாக்டர் தகநாயக்காவே சென்ற வாரம் பகிரங்கமாக ஆதரவு கொடுத்திருக்கிறார் என்றால் இதுதான் தேசிய ஒற்றுமையின் இலட்சணமா என்று பிரதமரைக் கேட்கிறோம். சிங்கள இன வெறியைக் கட்டுப்படுத்தச் சக்தியற்ற பிரதமரால் இந்நாட்டில் ஒருபோதுமே தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்பி விட முடியாது என்பது நிச்சயம்.

தமிழ் பேசும் மக்கள் தம்மைத்தாமே ஆளக்கூடிய சமஷ்டியாட்சி மலர்ந்து - சிங்கள மக்களுடன் சமவுரிமையுடன் வாழக்கூடிய நிலை ஏற்பட்டாலொழிய இந்நாட்டில் உண்மையான தேசிய ஐக்கியம் மலர்வதற்கு வாய்ப்பே கிடையாது என்பதை உறுதியாகக் கூற விரும்புகிறோம்.

# மூனைச் சிவசிதம்பரத்தின் முடக்கு வாதங்கள்!

தன்னெஞ்சறிவது பொய்யற்க - பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்- என்பது தமிழ் மறை கூறும் சத்திய வாக்கு. அரைச் சபாநாயகரும், உடுப்பிட்டி எம். பீ. யும் அரசியல் குத்துக்கரண வீரர் ஜி ஜீ. பொன்னம்பலத்தின் சீடருமான மூனைச் சிவசிதம்பரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமது கட்சியின் மேதினக் கூட்டத்தில் (மன்னிக்கவும் ஏப்ரல் தினக் கூட்டத்தில்) பேசியதாக தினசரிப்பத்திரிகைகளில் வெளிவந்த பேச்சைப் படிக்கும்போது வள்ளுவனின் மேற்படி குறள்தான் நமது ஞாபகத்துக்கு வருகிறது.

மே தினக்கூட்டத்தில்—தொலாளர்களின் தொல்லைகளை துன்பங்களை எடுத்துக் கூறவேண்டிய புனித நாளில் தமிழரசுக் கட்சிமீது வசைமாரி பொழிந்து, ஐந்தாந்தர அரசியல்பேசியிருக்கிறார் மூனைச் சிவசிதம்பரம். அவரது புலம்பலைக் கேட்டுப் பரிதாபப்படுகிறோம்.

மூனைச் சிவசிதம்பரத்தின் முடக்குவாதப் பேச்சுக்கு அதிகப்படி முக்கியத்துவம் கொடுத்து இந்நாட்டின் முட்டாள் தினசரிகள் விளம்பரம் செய்திருந்ததைக்கண்டு நாம் ஆச்சரியமடையவில்லை.

தமிழரசுக்கட்சிக்கு எதிராக யார் மூச்சு விட்டாலும், அதற்கு அதிகப்படி முக்கியத்துவம் கொடுத்து, தமிழ் மக்களின் கண்களில் மண்ணைத்தூவ இந்நாட்டுத் தினசரிகள் முயற்சிப்பது இன்று நேற்று ஆரம்பமானதல்ல; தமிழரசுக்கட்சி முளைவிட்ட நாளிலிருந்தே அதை ஒழித்துக்கட்ட, சிங்களக் கட்சிகளும், சிங்கள முதலாளித்துவ ஏடுகளும் நடத்திவரும் பிரசாரத்தை நாடறியும், தமிழ் மக்கள் அறிவார்கள்.

எனவே தமிழ் பேசும் மக்களின் விடுதலை இயக்கமான தமிழரசுக்கட்சியை முறியடித்து தமிழ் பேசும் மக்களை ஒற்றையாட்சியின் கீழ் என்றென்றும் சிங்கள மக்களுக்கு அடிமைகளாக வைத்துக் கொள்ள விரும்பும் சிங்களக் கட்சிகளுக்கு துதிபாடும் தமிழ் காங்கிரசைத் தூக்கிக் கொடுப்பதை விட தினசரி பத்திரிகைகளுக்கு வேறு என்னவேலை இருக்க முடியும்?

தமிழரசுக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறிய பின்னரும் தமிழ் காங்கிரஸ் அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டிருப்பது மூனைச் சிவசிதம்பரத்தின் நெஞ்சைச் சுட்டிருக்கிறது. தாம் செய்வது இனத்துரோகம் என்பதை அவரது நெஞ்சு இடித்துக்காட்டியிருக்கிறது. எனவேதான். தன்னெஞ்சே தன்னைச் சுட்டதைத் தாங்கிக் கொள்ள முடியாத மூனைச் சிவசிதம்பரம், அரசியல் பண்பிழந்து கீழ்த்தரமான முறையில் தமிழரசுக் கட்சி மீது வசைமாரி பாடியிருக்கிறார்.

தமிழ் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து வெளியேறுதேன் என்று மூனைச் சிவசிதம்பரத்திடம் யாரும் கேட்கவில்லை. அவரது மனச்சாட்சியே அவரிடம் அக்கேள்வியைக் கேட்டிருக்கலாம்; எனவேதான் தமது மனச்சாட்சியின் குரலை சகிக்கமுடியாமல் தமிழரசுக்கட்சியை தூற்றியிருக்கிறார்.

தமிழரசுக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறியது தேர்தல் ஸ்டண்ட் என்று கூறியிருக்கிறார் அரைச்

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

சபாநாயகர். தமிழினத்தை விலைபேசிவிற்று அரசியலில் ஸ்டண்ட் அடித்தடித்தே செல்லாக்காசாகிவிட்ட பொன்னம்பலத்தை தன்தலைவராக கொண்டவருக்கு, காண்பதெல்லாம் ஸ்டண்டாக தெரிவதில் ஆச்சரியமில்லை.

கறுப்புக்கண்ணாடி போட்டுப் பார்ப்பவனுக்கு யாவுமே கறுப்பாகத்தான் தெரியும். இதேபோல ஸ்டண்டிலே பிறந்து, ஸ்டண்டிலே வளர்ந்து, ஸ்டண்டிலேயே அழிந்து கொண்டிருக்கும் ஸ்டண்ட் கட்சியான தமிழ் காங்கிரசுக்கு எல்லாமே ஸ்டண்டாக தெரிவதில் புதினமில்லை.

சில மாதங்களுக்கு முன்பு, மாவட்டசபையே இல்லையென்ற பின்னரும் தமிழரசார் எதற்காக இன்னும் வெட்கங்கெட்டு ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள் அரசாங்கத்தில் என்று கேட்டவர் இதே ஸ்டண்ட் வீரர் மூனைச் சிவசிதம்பரம்தான் என்பதை மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை.

கடந்த தேர்தலின்போது ஜீ. ஜீ.க்குப் போடும் ஒவ்வொரு வாக்கும் யூ. என். பி.க்கு போடும் வாக்கு என பிரசாரம் செய்த தமிழரசார், தேர்தல் முடிந்து 24 மணிநேரத்துக் கிடையில் டட்லியுடன் ஒப்பந்தம் எழுதி ஆதரவு கொடுத்தார்கள் என்று கூறியிருக்கிறார் மூனைச் சீனு.

தமிழரசுக்கட்சி, தமிழர் உரிமைகள் பற்றி டட்லி சேனநாயகாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் செய்து கொண்ட பின்னர் தான் டட்லி ஆட்சிக்கு ஆதரவு தந்தது. அந்த ஒப்பந்தப்படி பிரதமர் நடக்காதபடியால் இன்று வெளியேறி விட்டது.

ஆனால் அரைச் சபாநாயகரின் தமிழ் காங்கிரஸ் எந்தவித ஒப்பந்தமும் உடன்படிக்கையும் இன்றி — தமிழினத்தின் உரிமைகளுக்கு எவ்வித பாதுகாப்பும் தேட வேண்டும் என்ற அக்கறையெதுவுமின்றி—நிபந்தனை ஏதுமின்றி யூ. என். பிக்கு ஆதரவு அளித்தது; இன்று டட்லி ஆட்சி சிறுபான்மை மக்களுக்கு அநீதி இழைத்து வரும்போது அதைஉணர்ந்து கொண்டும் தொடர்ந்து டட்லிக்கு முண்டு கொடுக்கிறது. தமிழ் காங்கிரசுக்குத் தமிழ் மக்களின் நலனைவிட டட்லியின் ஆட்சியைப் பாதுகாப்பதே பெரிதாகப் படுகிறது: தமிழினம் எக்கேடு கெட்டாலும், யூ. என். பி. ஆண்டால் போதுமென்று கருதுகிறது. ஆகவே பொன்னம்பலம் டட்லியின் கையாள் என்று தமிழரசுக்கட்சி பிரசாரம் செய்ததிலே என்ன தப்பு என்று கேட்க விரும்புகிறோம்.

தமிழினத்தின் உரிமைகளை பெறுவதற்காகத்தான் டட்லியுடன் தமிழரசு ஒத்துழைத்துப் பார்த்தது. ஆனால் யூ.என். பிக்கு மிண்டு கொடுக்கும் ஒரே நோக்குடன் டட்லியின் கால் கழுவுகிறது தமிழ்காங்கிரசு. இந்த உண்மை தமிழ் பேசும் மக்களுக்கு இன்று தெளிவாகப் புரிந்துவிட்டது. யூ. என். பி. யுடன் தமிழரசு கொண்டிருந்த உறவுக்கும் தமிழ் காங்கிரஸ் கொண்டுள்ள உறவுக்குமிடையேயுள்ள பேதம் தெரிந்து விட்டது.

தேசிய அரசாங்கத்துடன் சேர்ந்த பின்னர், தமிழரசுக் கட்சியினரைத் தம்முடன் சேர்ந்து செயல்பட தமிழ் காங்கிரஸ் அழைத்ததாகவும் ஆனால் தமிழரசுக் கட்சி தான் அதற்கு மறுத்து விட்டதாகவும் பெரிய புழுகாக புழுகியிருக்கிறார் மூனைச் சிவ சிதம்பரம்.

தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி அங்கம் வகித்து வந்த நேரத்தில், தமிழ் மக்களைக் கண்டு மாற்றான் கை கொட்டி நகைக்கத் தக்க விதத்தில் தமிழினத்தின் ஒற்றுமையைக் கெடுத்து வந்தவர்கள் தமிழ் காங்கிரசினர் தாம் என்பதை இந் நாட்டுத் தமிழ் மக்கள் மட்டுமல்ல நியாய புத்தி படைத்த சிங்கள மக்கள் கூட ஒப்புக் கொள்ளவே செய்வார்கள்.

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையர்க்கரசியின் மகத்தான சாதனை!

ஏப்பிரல் 8-ம் நாள் செவ்வாய்க்கிழமை. இப்போது பிற்பகல் 2 மணி. மதிய உணவை முடித்துக் கொண்டு மாநாட்டரங்கு நோக்கி வந்து கொண்டிருக்கிறேன். மருதனுமடம் சந்தியில் என்னை விலத்திக் கொண்டு தமிழரசுக் கொடியைத் தாங்கியபடி ஒரு மோட்டார் வண்டி நிற்கிறது.


'மகேஸ், ம. பொ. சியைப் பார்க்க வேண்டுமென்றீர்களே? வருகிறீர்களா?'—காருக்குள்ளிருந்தபடியே நண்பர் வழக்கறிஞர் ஆலாலசுந்தரம் அழைக்கிறார். அவரது அன்பழைப்பை தட்டிக்கழிக்க நான் என்ன முட்டாளா?

அடுத்த சில நிமிடங்களில் நீராவியடியிலுள்ள கோப்பாய் எம்.பி திரு. கதிரவேலுப்பிள்ளையவர்களின் இல்லத்துக்கு முன்னால் கார் நிற்கிறது. ஆம், திரு. கதிரவேற்பிள்ளையவர்களின் இல்லத்தில்தான் சிலம்புச் செல்வர்

காண்கிறோம். அவரது தமிழ்க்களை சொட்டும் முகமும் தமிழைப் பழிப்பவர்களைச் சுட்டெரித்து விடுவது போன்ற கெம்பீரப்பார்வையும் நரைத்த மீசையும், நரையாத தலை முடியும் மெலிந்த உடலமும் மெலியாத தமிழ்ப்பற்றும் எம்மை ஆகர்ஷிக்கின்றன. அவரது முகத்தையே சில விஞடி பார்த்தபடி பார்த்தபடி இருக்கிறோம்.

'சாப்பாடு தயாராகி விட்டது. பசியிருக்கிறீர்களே! சாப்பாட்டு விட்டுப் பேசலாமே'—அறைவாசலிலிருந்து ஓர் அன்புக்குரல் கேட்கிறது. திரு. கதிரவேற்பிள்ளையின் சகோதரியார் திருமதி மனோன்மணி சிலம்புச் செல்வரை மதிய உணவு உட்கொள்ளவரும்படி அழைக்கிறார்.

'சாப்பிட்டுவிட்டு வாருங்கள் ஐயா, நான் காத்துஇருக்கிறேன்' என்கிறேன். இல்லை, இல்லை உங்களுடன் பேசி முடித்து விட்டுச் சாப்பிட



இலக்கிய மாநாட்டிற்கு திரண்டுவந்திருந்த மக்கள் கூட்டத்தின் ஓர் பகுதி.

துரைக்கிறார். (இவை தனியே ஒரு கட்டுரையாக எழுதப்படவேண்டியவை.)

மாநில சுயாட்சிப் போராட்டத்தின் இறுதிக்


திருப்பதாக ம. பொ. சி. தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து எமது உரையாடல் திரும்புகிறது. இங்குள்ள தற்போதைய அரசியல் நிலை குறித்து ம. பொ. சியும் அவருடன் கூட வந்திருந்த கு. சா. கிருஷ்ணமூர்த்தியும் ஆர்வத்துடன் விசாரிக்கின்றனர். என்னால் முடிந்தளவு விளக்கமளிக்கிறேன்.

டட்லி அரசாங்கம் தமிழ் மக்களை நடத்தும் முறை,

இப்போழுது 'தில்லாடி வள்ளியம்மை' அரங்கில் மாதர் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசியல் துறையில்—இனத்தின் விடுதலையில் தாய்க்குலத்துக்கு ஏற்பட்டு வரும் விழிப்புணர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக இம் மாநாடு அமைந்திருக்கிறது.

'அரசியலா? ஏனடி நமக்கு அந்த வம்பு'—என்று தமிழ் பெண்கள் ஒதுங்கியிருந்து கொண்டு தேவையற்ற ஊர் வம்பு பேசிக் காலம் கழித்த நிலைமை இன்று மங்கி மடிந்து



தில்லாடி வள்ளியம்மையரங்கில் நடைபெற்ற மாதர் மாநாட்டில் திருமதி இராசபூபதி அருணுசலம் தலைமையுரை நிகழ்த்துகிறார்.

## கோவை மகேசன்

தமிழரசுக்கட்சிக்கு அளிக்கப்பட்டு மீறப்பட்ட வாக்குறுதிகள், எதிர்க்கட்சியின் போக்கு, இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் இவை போன்ற பல பிரச்சினைகளை யிட்டு மனம் விட்டுப் பேசுகிறார். ம.பொ. சி.

"மணி இரண்டரையாகிறது—சாப்பிட வாருங்கள் ஐயா"—என்றபடி மீண்டும் அன்புடன் ம. பொ. சியை அழைத்தபடி வந்த திருமதி மனோன்மணி, எனக்கும் ஒரு 'கூல்டிரிங்' தருகிறார். 'கூல்டிரிங்கை' அருந்தி விட்டு—சாப்பிடுவதற்கு ம. பொ. சியை அனுப்பிவிட்டு நாம் மாநாட்டரங்குப் பக்கம் போவோமா?

வருகிறது. தமிழ் மாதர்களிடம் இன விடுதலை வேட்கையும் சுதந்திர ஆவேசமும் மெல்லமெல்ல—ஆனால் உறுதியாகப் பற்றி பிடித்து வருகிறது. இதற்கு தூண்டுகோலாக விளங்கி வருபவர் திருமதி மங்கையர்கரசி அமிர்தலிங்கம் அவர்களாகும்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது, இந்திய மக்களை தட்டியெழுப்பி சுதந்திரப் பாதையில் கவிக்குயில் சரோஜினி நாயுடு நடத்தி வந்தது போல ஈழத் தமிழர் தம் சுதந்திரப் போராட்டத்தில் ஓயாது உழைத்து வருபவர் திருமதி மங்கை

(8ம் பக்கம் பார்க்க)

ம. பொ. சி. அவர்கள் தங்கியிருந்தார்.

'கொஞ்சம் இருங்கள்' என்று சிலம்புச்செல்வர் தங்கியிருந்த அறைக்கு வெளியே எம்மை நிறுத்திவிட்டு உள்ளே சென்ற நண்பர் ஆலாலசுந்தரம் சில விநாடிகளில் வெளியே வருகிறார். (என்னுடன் இனமுழக்கம் -செழியனும் வந்திருந்தார்.)

'உள்ளே போய் ஐயாவுடன் பேசலாம்' என்கிறார்

லாம்—பரவாயில்லை' என்கிறார் ம. பொ. சி.

உள்ளேயிருந்துகொண்டே ஐயா இல்லை யென்று சொல்லியனுப்பும் பெரிய மனிதர்கள் பலரை நான் சந்தித்திருக்கிறேன். இங்கேயோ வந்த இடத்திலும் சந்திக்க வந்தவரைக் காக்கவைத்து விட்டுசாப்பிடப்போவதுகூட தமிழ்ப் பண்புக்கு முரண்பட்டதாக கருதுகிறார் ம. பொ. சி. தமிழர் பண்பாட்

கட்டத்தில்- போராட்டத்தை நசுக்குவதற்கு டெல்லி முயன்றால் தி. மு. க. அமைச்சர்களும் பதவியைத் துறந்து விட்டுப் போராட்டத்தில் இறங்க விருப்பதாக தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அறிவித்

### எழுச்சியை ஏற்படுத்திய மூன்று நாட்கள்—4

ஆலாலு.. உள்ளே செல்கிறோம்.

அரையில் ஒரு நான்கு முழ கதர் வேட்டியுடன் துண்டு ஒன்றால் மேனியைப் போர்த்தியபடி கட்டிலில் சாய்ந்திருந்த ம. பொ. சி. அவர்கள் தனது பென்னம் பெரிய மீசையைத்தடவி விட்டுக் கொண்டே 'வாருங்கள்' என்று சிரித்தபடி வரவேற்கிறார்.

தமிழ் வளர்த்த சேரனும் சோழனும் பாண்டியனும் ம. பொ. சி. யின் வடிவில் பிறந்து வந்திருப்பதைக்

டின் முழு உருவமாக ம. பொ. சி. எனக்கு காட்சி தந்தார்.

சிலம்புச் செல்வரின் உடல் நலம் பற்றி நான் விசாரிக்கின்றேன்— அதிலிருந்து அவருக்கும் எனக்கும் உரையாடல் தொடங்குகிறது. தமிழ் நாட்டு அரசியல் நிலைமை, தமிழ் நாட்டு காங்கிரசின் போக்கு, மொழிப்பிரச்சினை, தொடங்கவிருக்கும் மாநில சுயாட்சிப் போராட்டம் இவைபோன்ற பல பிரச்சினைகளில் தமது கருத்தை ம. பொ. சி. தெளிவாக எடுத்



இலக்கிய மாநாட்டில் சிலம்புச் செல்வர் செந்தமிழ் கர்ஜனை புரிகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் மீது தமிழரசு பெ

# அமிர்தலிங்கம் சுமத்தும் கடும்

**ச**மஷ்டிக்கட்சி என்று அழைக்கப்படும் இலங்கைத்தமிழரசுகட்சியைப் போன்று இலங்கையில் வேறு எந்த அரசியற்கட்சியும் கடும் பிரச்சினைக்குரிய கட்சியாக விளங்கியதில்லை.

சமஷ்டிக்கட்சி கடந்த 15 ஆண்டுகளாக இந்நாட்டு அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை வகித்து வருகிறது. ஆயினும் அதன் தலைவர்கள் சமஷ்டி அரசியலுக்காக உழைப்பது என்று உறுதியெடுத்ததிலிருந்து இன்றுவரை கட்சி தனது குறிக்கோளை நெருங்கவில்லை.

எனினும் பெரும்பான்மையான தமிழர்களுக்கு சமஷ்டிக்கட்சிதான் பிரதிநிதித்துவம் வகிக்கின்றது. தமிழர்களுக்கும் பல மனக்குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. சமாதானத்தையும் ஒற்றுமையையும் கருதி அவை நீக்கப்பட வேண்டியது அத்தியாவசியமே.

சமஷ்டி வாதிகள், அவர்களது எதிரிகள் கருதுவது போன்று கலகத்தை ஏற்படுத்துபவர்களா? அல்லது அவர்களது கட்சி சமூகத்தின் உண்மையான நலன் கருதிப் பணியாற்றுகிறதா?

நான் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கத்துடன் உரையாடினேன். அவர் என்னிடம் கூறினார்:-

'சுயநலத்துக்காக நாட்டையே விற்கக்கூடிய அளவு தேசபக்தியும் பொறுப்புணர்வுமற்றவர்கள் என்று சமஷ்டிக்கட்சியினரைப்பற்றிக் கூறப்படுவது அர்த்தமற்ற கூச்சலாகும் எங்கள் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் பற்றித்தப்பெண்ணங்கள் ஏற்படுவதற்கு பத்திரிகைகளும், நாட்டிலுள்ள விஷமச் சக்திகளுமே பொறுப்பு. தமிழரசுக்கட்சி, இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம் பற்றி எப்படி ஆர்வம்கொண்டுள்ளதோ அதேபோலநாட்டின் எதிர்காலம்பற்றியும் கரிசனை கொண்டுள்ளது''

தமிழரசுக்கட்சி தி. மு. க. வுடன் தொடர்பு கொண்டுள்ளது என்ற குற்றச்சாட்டு பொய்யானது; விஷமத்தனம் நிறைந்தது என்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

மக்களின் ஆதரவு அற்ற சில தனிப்பட்டவர்கள் தங்களை தி. மு. க. ஆதரவாளர்கள் என்று கூறிக்கொள்ளுகிறார்களே தவிர, ஒரு கொள்கையை, நோக்கத்தை தேவையை, முன்வைத்து ஸ்தாபனரீதியாக தி. மு. க. இலங்கையில் இயங்கவில்லையென்று திரு. அமிர்தலிங்கம் விளக்கமளித்தார்.

''நாம் தமிழர் இயக்கம் பற்றி பெரிய சலசலப்பு ஏற்படுத்தப்படுகிறது இலங்கையில் இவ்வியக்கம் செயற்படும் ஒரு இடத்தின் முகவரியையாவது வெளியிடும்படி நான் சவால் விடுகிறேன். இவ்விஷயங்களையிட்டு அறியாமையில் சிக்கி அல்லலுறுபவர்களுக்கு, நாம் தமிழர் இயக்கம்இந்தியாவில் அதன் ஸ்தாபகரான ஆதித்தனராலேயே குழி தோண்டிப்புதைக்கப்பட்டு விட்டதென்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன், எனவே இலங்கையின் பாதுகாப்பையும் ஆதிபத்தியத்தையும் முறியடிப்பதற்கு தமிழரசுக் கட்சிக்கும் தென்னிந்தியாவுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவது முழுக்க முழுக்க கட்டுக்கதையாகும்' —இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

° ° °

திரு. அமிர்தலிங்கம் மேலும் என்னிடம்கூறினார்:

''தி. மு. க. அதன் ஆரம்ப காலத்தில் நாஸ்திகக் கருத்துக்களுக்கு அனுசரணையாக இருந்ததுடன் இந்து சமயத்தை கடுமையாகக் கண்டித்து வந்தது. தமிழரசுக் கட்சி இக்கருத்துக்களுடன் இணைந்து போகவில்லை. ஆனால், தி.மு.க.வை போல தீண்டாமைக்கு எதிராகவும் ஏனைய சமூக குறைபாடுகளை களையவும் உழைத்து வந்திருக்கிறது.

''தி. மு. க முதலில் தமிழ் நாடு, கேரளா, ஆந்திர தேசம், கன்னடம், நான்கையும் கொண்ட சுதந்திர திராவிட நாட்டை வற்புறுத்தியது. ஆனால் இப்போது இந்திய யூனியனுக்குட்பட்டு செயற்பட இணங்கியிருக்கிறது. தி. மு. க. வின் அரசியல் கோட்பாடுகளுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் எதுவித தொடர்பும் கிடையாது.

''எப்படியிருப்பினும். தமிழ் மொழியையும், தமிழர் பண்பாட்டையும் மறுமலர்ச்சியடையச் செய்ய தி. மு. க எடுக்கும் முயற்சிகள் எம்மைக் கவர்ந்துள்ளன இக்காரணத்தை முன்வைத்தே காலஞ் சென்ற தமிழக முதல்வர் அறிஞர் அண்ணாவுக்கு நாடு முழுவதும் அனுதாபக் கூட்டங்களை நடத்தினோம். அவரது மறைவுக்கு துக்கம் அனுஷ்டித்தோம்.

''இதே கலாசார பிணைப்பை முன்வைத்தே நாங்கள் தமிழரசுக் கட்சி மாநாட்டுக்கு ம. பொ. சியையும் அழைத்தோம். ம. பொ. சி. இந்திய தேசிய காங்கிரசில் இருந்தவர். அவர் இப்போது தமிழரசுக் கழகத்தின் தலைவராக இருக்கிறார். ம. பொ. சியின் தமிழரசுக் கழகம், தமிழ் நாட்டின் எல்லைகளை காவல் நாய் போல பாதுகாத்து வருவதுடன், மாநிலங்களுக்கு மேலும் சுயாட்சி கோருகிறது. எப்படியிருப்பினும் ம பொ. சி. இந்தியப் பிரிவினையை முற்று முழுதாக எதிர்ப்பவர்.''

° ° °

சில பத்திரிகைகள், தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் அண்ணாவின் உருவப்படமும் இடம் பெற்றதாகச் செய்திகள் வெளியிட்டிருந்ததாகக் குறிப்பிட்ட திரு. அமிர்தலிங்கம். ''அது சரியானதுதான். ஆனால் ஏனைய தமிழ் தலைவர்களினதும், புத்தர், ஏசுகிறிஸ்து போன்றவர்களின் உருவப்படங்களும் அங்கு இடம் பெற்றிருந்தது மறைக்கப்பட்டு விட்டது!'' என்று தெரிவித்தார்.

தொல்லையென்னவென்றால், எங்களைக் கண்டிப்பவர்கள் சமஷ்டியின் பொருளை விளங்கிக்கொள்ளாமலோ விளங்கிக்கொள்ள மறுத்தோ வருவதுதான்! ''இலங்கைத் தமிழரசுக் கட்சியென்ற எங்கள் கட்சியின் பெயரை அவர்கள் முழுக்க முழுக்க தவருக புரிந்துகொண்டுள்ளார்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சியென்பதன் பொருள் CEYLON TAMIL STATE PARTY என்பதாகும். அரசு (STATE) என்ற சொல்லு எதற்காக இராச்சியம் (KIGDOM) என்ற சொல்லுடன் பிணைக்கப்பட்டு குழப்பப்படவேண்டும்? ஐக்கிய

## ''அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எம்மால் சகித்துக்கொண்டி

சமத்துவம், சமாதானம், சமநீதி கிடைப்பதற்கு ஒரே வழி சமஷ்டிதான் என்று நீங்கள் கருதுகிறீர்களா? என்று நான் கேட்டேன். அவரது பதில் வருமாறு:-

''நிச்சயமாக. சிறுபான்மை இனங்கள் தங்கள் தங்கள் தனித்துவங்களை இழந்து பெரும்பான்மை இனத்துடன் சங்கமமாகிவிட வேண்டுமென்று கருதும் சிலர் இருக்கிறார்கள். இது நாங்கள் ஒருபோதுமே ஏற்றுக் கொள்ள முடியாதது. தமிழ் மொழியும், தமிழ் கலாசாரமும் இழக்கமுடியாத அளவுக்கு விலை மதிப்புள்ளவை. எங்கள் எதிர்காலச் சந்ததிக்கு அவற்றைப் பத்திரமாகப் பாதுகாத்து கையளிக்கவே விரும்புகிறோம். ஒரு சமஷ்டி அமைப்பின் கீழ் மட்டுந்தான், நாட்டின் ஐக்கியத்தை பாதுகாக்க முடியும்''

சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்த முடியாத அளவுக்கு இலங்கை சின்னஞ் சிறு நாடு அல்ல என்றும் திரு அமிர்தலிங்கம் மேலும் கூறினார்.

அமெரிக்கா பல அரசுகளைக் கொண்டது. இந்தியாவில் மாகாணங்கள் — அரசுகள் என்றே அழைக்கப்படுகின்றன. கேரள அரசு, தமிழ் நாடு அரசு, ஆந்திர அரசு போன்று பல அரசுகள் இந்தியாவில் செயற்படுகின்றன. இந்நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்ற பெயர் எப்படி பிரிவினை அச்சத்தை தூண்ட முடியும்?

''எங்களை எதிர்ப்பவர்கள்-சமஷ்டி ஆட்சி வெளிநாட்டுத் தொடர்புகளுக்கு வழி வகுத்துவிடும் என்கிறார்கள். இது தவறான கருத்து என்பதை சுவிட்சர்லாந்தைப் பார்ப்பவர்கள் புரிந்து கொள்ளமுடியும். இரண்டு உலக யுத்தங்களின்போதும், ஜெர்மனியும் பிரான்சும் ஒன்றுடன் ஒன்று மோதிப் போரிட்டபோதும். சுவிட்சர்லாந்தில் பிரெஞ்சு மொழி பேசும் மக்களும், ஜெர்மன் மொழி பேசும் மக்களும் பூரண சமாதானத்துடன் வாழ்ந்திருக்கின்றனர்.

''கடந்த ஆண்டு செக்கோஸ்லவேக்கியா — செக்,

நம்புகிறார். தமிழ்நாடு, கண்டிப்பகுதி, கரையோர சிங்களவர், மட்டக்களப்பின் தென்பகுதி (முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்கள்)ஆகியவையே அந்தநான்கு உறுப்புக்களுமாகும்.

கடந்த ஆண்டு, பாராளுமன்றத்தின் இரு சபைகளிலிருந்தும் நியமிக்கப்பட்டிருந்த பொறுக்குக் குழுவிடம் சமஷ்டிக்குட்பட்ட கண்டி அரசு கோரி நான்கு கோரிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டன. சமஷ்டி பற்றி மக்கள் சிந்திக்க ஆரம்பித்துள்ளனர் என்பதைஇது எடுத்து விளக்குகிறது என்கிறார் திரு. அமிர்தலிங்கம்.

''எங்கள் கருத்துப்படி, ஒவ்வொரு அரசும் தனது உள்ளூர் நிர்வாகத்தை நடத்துவதற்கு பொறுப்பாக இருக்கும். அதே வேளையில் மத்திய அரசாங்கம், பாதுகாப்பு, வெளிநாட்டு தொடர்புகள், நாணயம், மாகாணங்களுக்கிடையேயான போக்கு வரத்து ஆகியவற்றை கவனித்துக்கொள்ளும். மத்திய ஆட்சி— சனப் பிரதிநிதிகள் சபை, மூதவை ஆகிய இரு உறுப்புக்களைக் கொண்டதாக விளங்கும். சனப் பிரதிநிதிகள் சபை சனத்தொகையின்படி பிரதிநிதித்துவம் கொண்டதாக இருக்கும். மூதவைக்கு மாநில அரசுகளிலிருந்து பிரதிகளை தெரிவுசெய்து அனுப்பப்படுவார்கள்.''

### சம அந்தஸ்து

சம அந்தஸ்து என்று கூறும்போது எந்த அர்த்தத்துடன் அதைக் கூறுகிறீர்கள் என்பதை விளக்கப்படுத்துமாறு திரு. அமிர்தலிங்கத்திடம் கேட்டேன், அவர் கூறினார்:-

## சமஷ்டிக்கொள்கை, நாம்தமிழர் தி.மு.க. பற்றி

## சுவிட்சர்லாந்துக்கும் செக்கோஸ் பொருந்திய சமஷ்டி இலங்கைக்

''சுவிட்சர்லாந்து, செக்கோஸ்லவேக்கியா போன்ற பல நாடுகளில் சமஷ்டி ஆட்சி முறை வெற்றிகரமாக இயங்க முடியுமானல், இலங்கையில் மட்டும் அது வெற்றியளிக்க முடியாது என்பதற்கு எவ்வித காரணமும் என்னல் கண்டு கொள்ள முடியவில்லை சுவிட்சர்லாந்தில் 22 கன்டன்கள் உண்டு. அதே வேளையில் [illegible] படமுடியும்.

ஸ்லோவக் ஆகிய இரு இனங்களுக்கும் சமநீதி கிடைப்பதற்கு உறுதி செய்யும் வகையில் சமஷ்டி முறையைத் தழுவியது. பெல்ஜியமும் பலநூற்றாண்டுகளாக நீடித்து வரும் தனது நாட்டு மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமஷ்டியை ஏற்பது பற்றி ஆலோசித்து வருகிறது''

இலங்கையில் ஒரு நாள் .. இரண்டல்ல—நான்கு உறுப்பு அரசுகளைக்கொண்ட சமஷ்டி ஆட்சி மலரும் என்று உறுதியாக திரு. அமிர்தலிங்கம்

''சம அந்தஸ்து என்று நாம் கூறும்போது எண்ணுத் தொகையை அல்ல, தரத்தையே குறிப்பிடுகிறோம். நாங்கள் ஒவ்வொரு சிங்களவனுக்கும் தமிழ் தெரிந்திருக்க வேண்டுமென்றோ ஒவ்வொரு தமிழனுக்கும் சிங்களம் தெரிந்திருக்க வேண்டுமென்றோ எதிர்பார்க்கவில்லை. நாம் கூறுவதெல்லாம் சிங்களவருக்கு சிங்களம் எப்படியோ, அப்படி தமிழருக்கு தமிழ் இருக்க வேண்டுமென்பதுதான்.

''இல... தில் வா... வர்களுக்... போன்று... அலுவல்... தும் உரி... இருக்கவே... பகுதியில்... ஒரு சிங்க... யர் அ... சொந்த... யாற்றும்... ராக இரு... ...லை கடமை ... சாங்க ... மக்களின் புரிய வே...

'1964 ... க. தேர்த... இக்கோ... பட்டிருந்... சொந்த... பனத்தில்... சிங்கள... மத்தியில்... போதிய... மற்ற ... அரசாங்... யத்தில் ... கும் உ... கட்சியின்... தொடர்... வருவது... அளிக்கி...

இதன்... ...லிங்கம் ... அ... வெளிவே... காரண...

சில ... கள் எ... ...ற ந... நாம் அ... தோம், ஒன்றை...

வேறு ... வில்லை. ...தமிழ... அந்தஸ்... மட்டுமே... டைந்த... காவின்... தமிழ் ...த்தின்... தமிழ்... கள் தி... அதை... வெளி... சேரி... வடக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுச்செயலாளர்

# ம் குற்றச்சாட்டுகள்!

இம்மாதம் 1-ம் திகதி டைம்ஸ்வீக்எண்டர் ஏட்டில் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் ஒரு சிறப்புப் பேட்டியை அதன் நிருபர்களான இந்திரா, ஹென்ஸ்மென், ஜோசெப் ஆகியோருக்கு அளித்திருந்தார். அப்பேட்டியில் பல முக்கிய அரசியல் பிரச்சினைகளுக்கு பொதுச்செயலாளர் விளக்கமளித்திருந்தார். அப்பேட்டியை சுதந்திரன் வாசகர்களுக்கு அப்படியே இங்கு தருகிறேம்.

''இலங்கையின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும்— சிங்களவர்களுக்குள்ள உரிமை போன்று— தனது அரசாங்க அலுவல்களை தமிழில் நடத்தும் உரிமை தமிழனுக்கும் இருக்கவேண்டும். தமிழ்ப் பகுதியில் கடமையாற்றும் ஒரு சிங்கள அரசாங்க ஊழியர் அப்பகுதி மக்களின் சொந்த மொழியில் கடமையாற்றும் ஆற்றல் பெற்றவராக இருக்கவேண்டும். அதே [illegible]லை சிங்களப் பகுதியில் கடமை புரியும் தமிழ் அரசாங்க ஊழியரும் அப்பகுதி மக்களின் மொழியில் கடமை புரிய வேண்டும்.

களில் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சமவுரிமை கிடைத்துள்ளது. அரசாங்கப் பதிவு ஏடுகள் இருமாகாணங்களிலும் இருமொழிகளிலும் வைக்கப்படும. ஏனைய இடங்களில் அரசாங்கவெளியீடுகள், பெயர்ப்பலகைகள் போன்றவை இருமொழிகளிலும் இருக்கும். ஆனல் அதிகார பூர்வமான பதிவுகளும், அரசாங்கத் திணைக்களங்களுக் கிடையிலான தொடர்பும் சிங்களத்தில் மட்டுமேயிருக்கும்,

## அமுல் நடத்தப்படவில்லை

'இவை யெல்லாம் கடதாசியில் அழகாக இடம் பெற்ற ஆயிரகனக்கான புதிய தமிழ் ஊழியரின், நியாயமான தொகையினர் சிற்றூழியர்களே'

ஃ ஃ ஃ

1963ம் ஆண்டு அக்டோபர் மாதம், புலோலி ஆசிரியபயிற்சிக் கலாசாலையில், தோட்டக் காரர்களாகவும், வேலையாட்களாகவும், கண்காணிப்பாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்ட சிற்றூழியர்களின் சம்பளஉயர்வு சிங்களத் தேர்ச்சி இன்மைக்காக கடந்த ஆண்டு நிறுத்தப்பட்டது. இவர்களுச்கு வழங்கப்பட்ட நியமனக்கடிதங்களில் சிங்களத் தேர்ச்சி


# க்கு அநீதி விளைப்பதை

# ண்டிருக்க முடியாது"

'1964 ம் ஆண்டு ஐ. தே. க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் இக்கொள்கையும் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனுல் தனது சொந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளதை சிங்கள அரசாங்க ஊழியர் மத்தியில் அமுல் செய்ய போதிய திறமையும் ஆற்றலுமற்ற அரசாங்கம், தமிழ் அரசாங்க ஊழியர்கள் விடயத்தில் மட்டும் பழி வாங்கும் உணர்வுடன் சுதந்திரக் கட்சியின் கொள்கையையே

திருக்கிறன்னவேதவிர, தமிழ் மொழிவிதிகள் அமுல் நடத்தப்படவில்லை. அமுல் நடத்துவதற்கான நிர்வாக ஏற்பாடு கூட செய்யப்படவில்லை. விதிகளை வேண்டு மென்றே மீறி நடக்கும் அரசாங்க அதிகாரிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை;

'அரசாங்கசேவையிலுள்ளவர்களுக்கு திறைசேரிச் சுற்றறிக்கைகள் 700, 701 ன் மூலம் வழங்கப்பட்ட சில



பற்றி எவ்வித நிபந்தனையும் விதிக்கப்பட்டிருக்கவில்லை. ஒருவரது சேவை உறுதியும் ரத்துச் செய்யப்பட்டது. தேசிய அரசாங்கத்தில் ஒரு அங்கமாக நாம் இருந்ததால் இதற்காக நாம் பழிச்சொல் ஏற்க நேரிட்டது.

# பற்றி விளக்கம்!

தொடர்ந்து கடைப்பிடித்து வருவது எமக்கு துயரத்தை அளிக்கிறது'

★

இதன் பின்னர் திரு. அமிர்[illegible]லிங்கம், தமது கட்சி தே[illegible] அரசாங்கத்தை விட்டு வெளியேறவேண்டிஏற்பட்ட காரணங்களை விளக்கினர்.

[illegible]சில குறிப்பிட்ட உரிமைகள் எமக்கு வழங்கப்படும் [illegible]ற நம்பிக்கையுடன் தான் நாம் அரசாங்கத்தில் சேர்ந்தோம், ஆனல் ஒன்றே ஒன்றைத் தவிர இன்று வரை

சலுகைகள் கூட மெல்ல மெல்ல—ஆனல் நிச்சயமாக நிர்வாக ரீதியில் புறக்கணிக்கப்பட்டுவருகிறது.

'பழைய அரசாங்க ஊழியர்களின் பதவி உயர்வுக்கு சிங்களத் தேர்ச்சி முன்கூட்டியே தேவையில்லை யென்பதை 700 வது திறைசேரி சுற்று நிருபம் தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறுகிறது. ஆனல் நடைமுறையில், பதவி உயர்வுக்கான சகல நேர்முகப் பரீட்சையின் போதும், சிங்களத் தேர்ச்சி பற்றி கேள்வி கேட்கப்படுகிறது. இதனல்

''701வது திறைசேரிச் சுற்றறிக்கை, சிங்களத் தேர்ச்சிக்கான அளவையும் எஸ்.எஸ். சி. யிலிருந்து எட்டாந்தரமாகக் குறைத்தது. ஆனல் நடைமுறையில் இன்றைய எட்டாம் வகுப்புத்தரம், 1962ம் ஆண்டின் எஸ். எஸ் சி. தரத்தையும்விட கடுமையாக இருக்கிறது. இதனல் புதிய ஊழியர்கள் சிங்களத் தேர்ச்சியடைவதில் மிகுந்த கஷ்டப்படுகின்றனர். இத

# கோஸ்லவேக்கியாவுக்கும்

# க்கு ஏன் பொருந்தாது?

வேறு எதுவும் நடைபெறவில்லை.

[illegible]தமிழுக்கு சட்டரீதியான அந்தஸ்த்தைப் பெறுவதில் மட்டுமே நாம் வெற்றியடைந்தோம். பண்டாரநாயகாவின் 1958 ம் ஆண்டுத் தமிழ் மொழி விசேட சட்[illegible]த்தின் கீழ் 1966 ஆண்டு, தமிழ் மொழி விசேட விதிகள் நிறைவேற்றப்பட்டன. அதையொட்டி அண்மையில் வெளியிடப்பட்ட திறைசேரி சுற்றறிக்கையின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்

பழைய தமிழ் ஊழியர்களின் பதவி உயர்வு வாய்ப்பு தட்டிப்பறிக்கப்படுகிறது.

தங்கள் நாளாந்தக் கடமைகளை ஆற்றுவதற்கு சிங்கள மொழியறிவு தேவையற்ற புதிய ஊழியர்களான சிற்றூழியர்கள், சிங்களந் தேர்ச்சிபெறத் தேவையில்லையென்பதை 701 வது திறைசேரி சுற்றறிக்கை தெளிவாககூறுகிறது. ஆனல் சிங்களத் தேர்ச்சியடை[illegible] ததற்காக வேலை நீக்[illegible] வித்தல் வழங்கப்பட்டுள்ள

ஞல் அவர்கள் சேவையில் உறுதிப்படுத்தப்படுவது காலதாமதமாகிறது.

''முன்பு புதிய தமிழ் ஊழியர் மூன்று பரீட்சைகளின் பின் சேவையில் உறுதிப்படுத்தப்படுவார். சேவையில் உறுதிப் படுத்தப்பட்ட பின்பே எஸ். எஸ். சி. சோதனை எழுதுவார். இன்றும் அதே வழமைதான் பின்பற்றப்படுகிறது என்ற [illegible] படுத்தப்படாமல் செய்யும்

மோசமான நோக்கத்துடன் எட்டாம் வகுப்புத்தரம் கடுமையாக்கப் பட்டிருக்கிறது.

''நான் இது பற்றி சென்ற பட்ஜட் விவாதத்தின்போது நிதியமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்தேன்' நிதியமைச்சரும் கவனிப்பதாக கூறினர். ஆனல் எதுவும் நடைபெறவில்லை.''

வேலை வழங்குவதில் அரசாங்கம் காட்டி வரும் பாரபட்சம் பற்றி திரு. அமிர்தலிங்கம் பேசினர். விமான படைச் சேவைக்கு தெரிவு செய்யப்பட்டு தியத்தலாவைக்குப் பயிற்சிக்கு அனுப்பப்பட்ட ஒரு தமிழ் வாலிபருக்கும் முஸ்லிம் வாலிபருக்கும் நேர்ந்த கதியை திரு. அமிர்தலிங்கம் எடுத்து விளக்கினர். தியத்தலாவையில் அவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு ஆளாக்கப் பட்டனர். சிங்களத்தில் தேர்ச்சியில்லாத காரணத்தை சுட்டிக்காட்டி அவர்கள் அநீதியாக வேலை நீக்கம் செய்யப் பட்டனர். பிரதமர் இது பற்றி நடவடிக்கையெடுப்பதாக கூறினர். ஆனல் எதுவும் நடைபெறவில்லை.

''திறைசேரிச் செயலாளர் பதவியில் ஒரு தமிழர் இருப்பதைக்கொண்டு மக்கள் எந்த முடிவுக்கு வந்தாலும் ''பனிபெய்து குளம் நிரம்பி விடாது.''

''என்னை நம்புங்கள். நான் என்ன கூறுகிறேன் என்பதை புரிந்துகொண்டே கூறுகிறேன். தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளைத் துடைப்பதற்கு நாம் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையில்தான் அரசாங்கத்தை விட்டு வெளியேறினேம். யாழ்ப்பாண மக்கள் அரசாங்கத்தின் பாரபட்ச நடவடிக்கைகளுக்கு நாங்களும் அனுசரணையாக இருக்கிறேமோ என ஐயப்பட ஆரம்பித்துவிட்டனர்.''

ஃ ஃ ஃ

மாவட்டசபை மசோதாவில் பிரதமர் தோல்வியடைந்தவுடன், தமிழ் பேசும் மக்களுக்கென திருமலையில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு வாக்குறுதியளித்ததாகவும், 1969ம் ஆண்டு அக்டோபரில் அது இயங்கும் என எதிர்பார்க்கப்பட்டதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். இத்திட்டமகைவிடப்பட்டது. பிரதமருக்கும் இது அறிவிக்கப்பட்டது. ஆனல் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

''ஏராளமான பாரபட்ச நடவடிக்கைகளுக்கு கல்வியமைச்சே பொறுப்பு. 1966ம் ஆண்டளவில் மலைநாட்டுப் பகுதியில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் தனித்தனிப் பாடசாலைகள் நிறுவித் தருவதாக பிரதமர் வாக்களித்தார். சிங்களப் பாடசாலைகளில் உள்ள தமிழ்ப்பிரிவுகள் திருப்தியற்று இருந்ததால் தமிழ்ப்பாடசாலைகளைத் தனியே பிரிக்கும்படி கேட்டோம். இதுவரை எதுவும் நடைபெறவில்லை. யாரும் அக்கறைப் படவுமில்லை.

''அபிவிருத்தித் துறையில், வடக்கும் கிழக்கும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. காங்கேசன்துறை அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட வில்லை. கிழக்கு போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படாமல் புறக்கணிக்கப் படுகிறது. வெளிநாட்டு உதவியுடன் தொடங்கப்படும் கைத்தொழில் திட்டங்களில் வடக்கு கிழக்குக்கு உரிய இடம் தரப்பட வில்லை.

ஃ ஃ ஃ

''ரூபாவின் நாணயமதிப்பு குறைக்கப்பட்ட நேரத்தில் நெல்லின் உத்தரவாத விலை உயர்த்தப்பட்டது. அதே சலுகையை வெங்காய உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் விவசாயிக்கும் அளிக்கும்படி கேட்டோம். வடக்கில் நெல் குறைவாகவே விளைவிக்கப் படுகிறது. இந்த நெல்லும் உள்ளூர் தேவைக்கே சரியாகிவிடும். வெங்காயம்தான் காசுப் பயிராகும். எமது கோரிக்கை நிராகரிக்கப் பட்டு விட்டது. இத்தகைய சூழ் நிலையில் அரசாங்கத்தில் தொடர்ந்து அங்கம் வகிப்பதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா?''

அமிர்தலிங்கத்தின் கணிப்பின்படி எதிர்காலம் இலகுவானதல்ல. காலப்போக்கில் அரசியல் மாற்றத்தின் மூலம் இந் நாட்டில் சமஷ்டி ஏற்பட்டே தீரும் என்பதில் அவர் உறுதி கொண்டுள்ளார். அதுவரை அவரது கட்சி தீண்டாமையை ஒழித்துக்கட்டி தமிழ் பேசும் மக்களை ஒரே அரசியல் சித்தாந்தத்தின் கீழ் ஒன்று திரட்டும்.

''நாம் பூரணமாக அகிம்சை வழியையே ஏற்றுக் கொண்டுள்ளோம்'' —என்று இறுதியாக திரு. அமிர்தலிங்கம் கூறிமுடித்தார்.

## மாதகல் சென், தோமஸ் சனசமூக நிலையம்

மேற்படி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் சென்ற சனிக்கிழமை நடைபெற்றபோது நடப்புவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

போஷகர் வண. பிதா. எல். யோசெவ் ஓ. எம். ஐ. தலைவர்: அ. லூயிஸ், உப தலைவர்: ஆ. அன்ரணி பெர்ணன்டோ. கௌரவ காரியதரிசி: நீ. ஜேச் மரியதாஸ், உப காரியதரிசி- கி. ம. றீற்றர், தனதிகாரி: அ. யோசெவ், விளையாட்டுத் தலைவர்: ம. ரயிற்ரெஸ் ஜேசுதாஸ், உப விளையாட்டுத் தலைவர்; செ. லூட்ஸ் பிரான்சீஸ், நிலையப்பாதுகாவலன்: இ பிரான்சீஸ், உபநிலையப் பாதுகாவலன்: ப. அன்ரனி பொன்கலன், அங்கத்துவ எண் பார்வையாளர்: செ.அ. சேம்பர்லெயின், நிர்வாகசபை உறுப்பினர்: ச. பா. யோசெவ், இ. பெனடிக்ற், சி. அருள்பிரகாசம், ஆ. இம்மனுவேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம.பொ.சியும் செல்வாவும் அளவளாவிய காட்சி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யர்க்கரசி அவர்கள்; கட்சியிலுள்ள கடும் தீவிரவாதிகளில் இவரும் ஒருவர்.

கடுஞ்சிறையா? தடுப்புக்காவலா-எதற்கும் அஞ்சாது முன்னணியில் நிற்கும் திருமதி அமிர்தலிங்கம் அவர்களின் ஓய்வு ஒழிச்சலற்ற சேவைதான், தமிழ்ப் பெண்களுக்கு அரசியலில் ஆர்வத்தையும் கவர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது என்பதில் எள்ளத்தனையும் ஐயமில்லை.

தமிழரசு மாநாடு நடைபெற்ற மூன்று தினங்களிலும் கலந்து கொண்ட பல்லாயிரக் கணக்கான மகளிர் கூட்டத்தைக் கண்ட போதுதான் திருமதி அமிர்தலிங்கத்தின் மகத்தான சாதனையும் ஆற்றலும் விளங்கியது. வேறு எந்த அரசியற் கட்சிக் கூட்டத்திலும் இத்தனையாயிரம் பெண்கள் கலந்து கொண்டதுமில்லை — கலந்து கொள்ளவும் மாட்டார்கள் என்று துணிந்து கூறுவேன்.

சாவகச்சேரி நவத்தின் பெண் கொடுத்த மாமியும் இயக்கத்தின் பழம் பெரும் தலைவியுமான திருமதி இராசபூபதி அருணாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாதர் மாநாட்டில், செல்விகள் சிவ செல்வமணி, சிறிய புஸ்பம் ஆசிர்வாதம், சற்குணதேவி, திலகமணி, நளாயினி, சந்திரலேகா, ஆகியோருடன் மருத்துவ கலாநிதி தேவநாயகி அம்பலம்பிள்ளை, திருமதி பேளி அத்தனுசியார், திருமதி பேரின்ப நாயகி சுப்பிரமணி ஆகியோர் உரை நிகழ்த்திய பின்னர் கணீரென்று இனிமையான குரலில் திருமதி அமிர்தலிங்கம் பேசுகிறார். அவரது பேச்சில் தமிழுணர்வு கொப்பளிக்கிறது.

1961ம் ஆண்டு நடைபெற்ற கச்சேரி சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்ட மறக் குலப் பெண்களையெல்லாம் நினைவு கூர்ந்த திருமதி அமிர்தலிங்கம் அவர்கள், 'மீண்டும் உரிமைபோராட்டத்திற்கு தமிழர்களாகிய நாம் தயாராகி விட்டோம். விடுதலை இயக்கத்தில் சேர்ந்து போராட தமிழ் பெண்கள் அணியணியாக திரண்டு வந்துவிட்டார்கள். தந்தை செல்வா அவர்கள் உரிமைப் போராட்டத்துக்கு எம்மை அழைத்துச் செல்ல வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தார். திருமதி மங்கையர்க்கரசியின் வீரவுரையுடன் மாதர் மாநாடு நிறைவெய்துகிறது.

அடுத்து, அமரர் கந்தையா அரங்கில் கவியரங்கம். 'எங்கள் எதிர்காலம்' என்னும் தலைப்பில் ஐந்து கவிஞர்கள் கவிபாட தயாராக இருக்கின்றனர். கவியரங்கிற்கு நம் நாட்டுச் சிறந்த கவிஞர்களில் ஒருவராகிய கவிஞர் கந்தவனம் தலைமை தாங்கி தலைமையுரையை கவிதையில் நிகழ்த்துகிறார். சொல்லழகும் பொருளாழமும் நிறைந்த அவரது கவிதையிலே சொக்கி நின்ற மக்கள் கூட்டம், இடையிடையிலே அவர் உதிர்த்த நகைச் சுவை விருந்துக்கு 'அப்ளாஸ்' தந்து தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது.

வே. குமாரசாமி செ. சுந்தரம்பிள்ளை ஆகியோரது கவிதைகளில் பொதிந்திருந்த நகைச்சுவையும் நல்ல கருத்துக்களும் மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெறுகின்றன. தமிழரசுக் கட்சியின் அரசியல் கொள்கைகளையொட்டி வீறுகொண்ட கவிதைகளைப் பாடினர் கவிஞர் சு. சண்முகநாதனும் வன்னியூர்க் கவிராயரும். பரீட்சைபெடாத பண்டிதரைப் போன்று, எதுவித முன்எற்பாடுமின்றி 'மைக்கின்' முன் நின்றபடியே நல்ல கவிதைகளை அப்போதே மனதில் யாத்து எவ்வித தயக்கமுமின்றி பாடுகின்றார் பண்டிதர் க. இராமச்சந்திரன். இராமச்சந்திரனின் ஆற்றலைக் கண்ட மக்கள் பலத்த கையொலியெழுப்பி வரவேற்கிறார்கள். பண்டிதரின் கவிதா ஆற்றலை நானும் கண்டு வியக்கிறேன்.

இப்போது இரவு 8 மணி. யாழ்நூல் தந்த வித்தகர் விபுலானந்தரின் பெயரால் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் இலக்கிய மாநாடு ஆரம்பமாகிறது. இலக்கிய மாநாட்டுக்கு அறிவும் ஆற்றலும் படைத்தவரான பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமை தாங்கி தலைமையுரை நிகழ்த்துகிறார். ஏனோ திரு. இரத்தினத்தின் பேச்சு அன்று சுவைதரவில்லையே!

மேடையில் சிலம்புச் செல்வர் ம. பொ. சி.யும் ஏனைய தமிழரசுத்தலைவர்களும் வீற்றிருக்கின்றனர். ஒரு ஓரத்தில் நாற்காலியொன்றில் புன்னகை பூத்த முகத்துடன் தமிழரசுத் தந்தை அமைதியாக இருக்கிறார்.

அடடா, ம. பொ. சி. அவர்கள் மேடைக்கு வந்ததும் நடந்த அந்த உள்ளமுருக்கும்சம்பவத்தை கூறுது விட்டு விட்டேனே! மேடையில் ம. பொ. சி. ஏறியதுதான் தாமதம்—அங்கு வீற்றிருந்த தமிழரசுத்தந்தையைக் காண்கிறார். அவரது அகமும் முகமும்மலருகிறது. நேரே தந்தையிடம் செல்கிறார். செல்வாவின் கரங்களைப்பற்றிக்கொண்டு சுகம் விசாரிக்கிறார். தமிழ்த்தாயின் இரு தவப்புதல்வர்களின் கண்களும் சந்திக்கின்றன. அந்தப்பார்வையின் சந்திப்பு எத்தனையோ கதைகளைத் தமிழ் மக்களுக்கு கூறுகின்றன! சிலம்புச் செல்வரும்—செல்வாவும் சந்தித்த அந்தச் சில வினாடிகள் வாழ்விலே மறக்கமுடியாதவை!

இதோ, நமது இரசிகமணி கனக செந்திநாதன் உரை நிகழ்த்துகிறார். அந்த மெலிந்த உடலிலிருந்து எத்தனை உறுதி வாய்ந்த சொற்கள் வெளிப்படுகின்றன. ஈழத்து தமிழ் எழுத்தாளனின் படைப்புக்கள் வேறு எந்த நாட்டுத் தமிழ் எழுத்தாளனின் படைப்புக்களுக்கும் குறைந்ததல்ல — தமிழ் நாட்டை விட ஈழத்தில இலக்கிய ஆவேசம் கரைபுரண்டோடுகிறது என்பன போன்ற விபரங்களையெல்லாம் புள்ளிவிபரங்களுடன் எடுத்துரைத்தபோது ஈழத் தமிழ் எழுத்தாளன் ஒருவனுக்கு இருக்க வேண்டிய 'மிடுக்கு' இரசிகமணியிடம் மிளிர்வதைக் கண்டேன்.


இதன் பின்னர், ஆசிரியர் புதுமைலோலன் எழுதிய தடுப்புககாவலில் நாம்என்ற நூலை வெளியிட்டு வைத்து உரைநிகழ்த்துகிறார் மீன்பாடும் தேனாட்டின் முடிசூடாமன்னரான செந்தமிழ்ச் செல்வர் இராசதுரை.

1961ம் ஆண்டு வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தின் முதல் நாளன்றே களத்தில்குதித்து பொலீசாரின் தாக்குதலுக்குள்ளாகி தியாகத்தழும் பேற்ற ஆசிரியர் புதுமைலோலனை சத்தியாக்கிரகத்தின் இறுதிக்கட்டத்தில் அப்போதைய அரசாங்கம் ஏனைய தலைவர்களுடன் சேர்த்து தனது விருந்தாளியாக்கியது. பனாகொடையில் இராணுவ முகாமில் 100நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஏனைய தொண்டர்களுடன் திரு. புதுமைலோலனும் இருந்தார். அக்காலத்தில் நடைபெற்ற அரசியல் சம்பவங்களையும், தடுப்புக்காவல் முகாமில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளையும் தொகுத்து, தனது மகள் அன்பரசிக்கு எழுதும் கடித வடிவில் திரு. புதுமைலோலன் 1962ம் ஆண்டு சுதந்திரனில் எழுதிவந்ததை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். அக்கடிதங்களையே "தடுப்புக் காவலில் நாம்" என்னும் பெயரில் நூலாக வெளியிட்டிருந்தார்.

இந்நூலைத்தான் இராசதுரை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்துகிறார். இராசதுரை தமது பேச்சில் நம்மையெல்லாம் போராட்டக் காலத்துக்கு இழுத்துச் சென்றதுடன், தமிழ்நாட்டுக் கவிஞர்கள் இலங்கையை சிங்களத்திவு என்று பாடி வைத்ததற்கும் பலத்தகண்டனம் தெரிவித்தார்.

இதையடுத்து புதுமைலோலன் உரை நிகழ்த்துகிறார்; நீண்ட நாட்களுக்குப் பின்னர் தமிழரசு மேடையில் தோன்றிய புதுமைலோலனின் பேச்சுக்கு தமிழ் மக்களிடையே தனிவரவேற்பு இருந்ததை அவதானித்தேன். புதுமைலோலன் உரையாற்றிக் கொண்டிருந்தபோது கூட்டத்திலிருந்த ஒருவர்—நீர்

(9-ம் பக்கம் பார்க்க)






உலக சிறுவரில் அரைப் பகுதியினர் ஈறுவியாதிகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது உலக சுகாதார நிபுணர்கள் கூற்று.

அநேகம் பற்கள் ஈறுவியாதிகளினாலேயே சேதமடைகின்றன என்பது இன்றைய கண்டுபிடிப்பு. ஈறுவியாதிகள் எங்கும் பரந்து ஈறுகளை நிரந்தரமாகவே சேதமாக்குகின்றன. இதனால் உலக சிறுவரில் அரைப்பகுதியினரும் வளர்ந்தோரில் பெரும் பகுதியினரும் பாதிக்கப்படுகின்றனர்.

ஈறுவியாதிகளை தடைப்பண்ண நிச்சயமான வழி ஈறுகளை உடனடியாக கவனிப்பதே — அதாவது போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு ஈறுகளை பராமரிப்பதே. போர்ஹான்ஸ் இளம் பற்கள் உரமாக வளரவும், உரம் பற்கள் இளமையுடன் நிலைக்கவும் உதவுகிறது — பற்கள் சுத்தமாகவும் வெண்ணிறமாகவும் விளங்கச் செய்கிறது.

எவ்வளவுக்கு உடனடியாக உங்கள் சிறுவரின் ஈறுகளை கவனிக்கிறீர்களோ அவ்வளவுக்கு அவர்கள் பற்கள் நீடித்திருக்கும். இன்றே அவர்களுக்கு போர்ஹான்ஸ் பற்பசை உபயோகிக்க பழக்குங்கள். போர்ஹான்ஸ் ஈறுகளை பாதுகாக்கும் விசேட மருந்துகள் கொண்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூனச் சிவசிதப்பரத்தின்.....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு சின்னப் பிரச்சினையிலும் கூட தமிழரசுக் கட்சிக்கு எதிராக சனியன் போல மல்லுக்கட்டி நின்றது தமிழ் காங்கிரஸ். தமிழினத்துக்கு உரிமை கிடைக்காவிடினும் தமிழரசுக் கட்சிக்கு வெற்றி கிடைக்காமல் செய்ய வேண்டுமென்பதற்காக மிகவும் அற்பத்தனமாக நடந்து கொண்டவர்கள் தமிழ் காங்கிரசு எம். பீக்கள் என்பதை அவர்களது நடவடிக்கைகள் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன.

மார்ட்டின் கமிஷன் அறிக்கையை எதிர்த்து ஈனத்தனமாக நடந்தவர்கள் யார்? தமிழ் காங்கிரசினர் அல்லவா?

மாவட்ட சபை வெள்ளையறிக்கை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட நேரத்தில் மிகவும் அற்பத்தனமாக நடந்து ஈழத் தமிழினம் முழுமைக்குமே அவமானத்தை ஏற்படுத்தியவர்கள் தமிழ் காங்கிரசினர் தாம் என்பதை இந் நாட்டு தமிழ் மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்:

பாராளுமன்றப் பண்பாடுகளையெல்லாம் மறந்து மாவட்ட சபை வெள்ளையறிக்கை விவாதத்தின் போது தமிழரசுப் பொதுச் செயலாளரை நோக்கி 'பொத்தடா வாய்' என்று ஈனத்தனமாக கூறிய பொன்னம்பலமா தமிழினத்தின் ஒற்றுமைக்கு வித்திடக் கூடியவர்?

மாவட்ட சபை மீது இரு சிங்களக் கட்சிகள் மோதிக் கொள்வதை தவிர்ப்பதற்கும், தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் மோதிக் கொள்ள சந்தர்ப்பம் அளிப்பதற்காகவுமே விவாதத்தை கூட்டுக் கட்சிகள் பகிஷ்கரித்ததாக பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா பாராளுமன்றத்தில் கூறி பொன்னம்பலத்துக்கு 'சேட்டிபிக்கேட்' கொடுத்தாரே, இதுதான் கேடுகெட்ட தமிழ் காங்கிரஸ் ஒற்றுமைக்கு அழைத்த இலட்சணமா? மூனச் சிவசிதம்பரம் இதற்கு என்ன சால்ஜாப்பு கூற முடியும்?

பாராளுமன்றத்தில் தாங்களும் சேர்ந்து இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டம், அடையாள அட்டைகள் சட்டம் ஆகியவற்றை ஆதரித்து கை தூக்கிவிட்டு" வெளியில் வந்து தமிழரசுக் கட்சி தமிழினத்தைக் காட்டிக் கொடுத்து விட்டதாக காங்கிரஸ் எம். பீக்கள் பச்சைப் பொய் கூறித் திரிந்தார்களே, இதுதான் ஒற்றுமையின் இலட்சணமா?

பெரும்பான்மைத் தமிழ் மக்களின் கனவாட தமிழ்ப் பல்கலைக்கழகத்தை உருவாக்காமல் தடுப்பதற்காக இந்து பல்கலைக் கழகம் என்று ஒரு உள்ளத் தூய்மையற்ற கோஷத்தை எழுப்புவது தான் ஒற்றுமைக்கு அடையாளமா?

தமிழரசுக்கட்சியை ஒற்றுமையாக செயல்பட வரும்படி தமது கட்சியழைத்ததாம்—தமிழரசு மறுத்துவிட்டதாம்— மூனச் சிவசிதம்பரம் யாருக்குக் காதுகுத்தப் பார்க்கிறார்? யாரை ஏமாற்றப் பார்க்கிறார்?

தமிழினத்துக்குக் கொள்ளி சொருகும் தமிழ் காங்கிரசின் திட்டத்துக்குத் தமிழரசுக்கட்சி எப்படி உதவ முடியும்? ஒத்துழைப்புக் கொடுக்க முடியும்?

மூனச் சிவசிதம்பரத்தின் ஏனைய முடக்கு வாதங்களை அடுத்த வாரம் அலசுவோம்.

## ம. பொ. சி., செல்வாவும்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலிருந்து மாநாட்டுக்கென வந்தவர்-"இப்பொழுது பேசுபவர் தமிழ்நாட்டிலிருந்து வந்தவரா?" என்று கேட்கிறார்; 'இல்லை—ஏன்?' என்கிறேன். 'இல்லை' அவரது பேச்சில் தி. மு. க. பேச்சாளர்களது வாடை அடிக்கிறது. அதனால் கேட்கிறேன்' என்கிறார் அந்த அன்பர்.

புதுமைலோலனுக்குப் பின்னர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. மழை பொழிவது போல உரையாற்ற, இடையிடையே இடிஇடிப்பதுபோன்று மக்கள் கையொலி எழுப்புகிறார்கள். "ஈழத் தமிழர்களின் காந்தியாக விளங்கும் செல்வநாயகம் அவர்களே!" என்று தனது உரையைத் தொடங்கிய ம. பொ. சி அவர்கள் சரியாக 1 மணி நேரம் தமிழ்க் கடலில் கூடியிருந்த மக்களைக் குளிக்க வைத்தார்; இலக்கிய மாநாடு இத்துடன் நிறைவு பெறுகிறது. அடுத்த நிகழ்ச்சியாக தமிழரசு வாலிபர்கள் நாடகம் ஒன்றை நடத்துகிறார்கள். தமிழன் கதையாம். அடுத்த வாரம் அதைப் பார்ப்போமா?

## இந்துக்களுக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விவேகானந்தசபை பல மாதங்களுக்கு முன்பே அரசாங்கத்திடம் இந்துக்களுக்கு காட்டப்படும் இவ் வேறுபாட்டை அகற்றும்படியும் இந்துக்கள் வட இந்தியாவில் வணங்க வேண்டிய தலங்கள் பௌத்தர்கள் வணங்க வேண்டிய தலங்களைவிட அதிகம் எனவும் எழுத்து மூலம் கோரிக்கை சமர்ப்பித்திருந்தது."

—இவ்வாறு கொழும்பு விவேகானந்தசபை பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் ஆணித்தரமாக தெரிவித்தார்.

வட இந்தியாவுக்கு யாத்திரை செல்லும் யாத்திரீகர்களில் பௌத்தர்களுக்கு மட்டும் 500 ரூபாவும், இந்துக்களுக்கு ஆக 300 ரூபாவும் வழங்கப்படுவதேன்? இது பாரபட்சமாகாதா என அண்மையில் பாராளுமன்றத்தில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் எழுப்பியிருந்த கேள்விக்கு வட இந்தியாவில் 30 தினங்களுக்கு மேற்படாமல் தங்கியிருப்பவர்களுக்கு 300 ரூபாவும் 30 தினங்களுக்குமதிகமாக தங்கியிருந்தால் 500 ரூபாவும் ஒதுக்கப்படுவதாகவும், வட இந்தியாவில் உள்ள இந்து ஆலயங்களுக்கு சென்றுவர 30 தினங்களுக்கு மேலாக வேண்டியிருக்கும் என எந்த இந்து சமய சங்கமும் முறையீடு செய்யவில்லையெனவும் பதிலளித்திருந்தார்.

அமைச்சரின் இப் பதிலை கொழும்பு விவேகானந்த சபையைச் சேர்ந்த மேற்படி பிரமுகரிடம் சுட்டிக்காட்டிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்மேலும் கூறியதாவது:—

இந்துக்களுக்கு எதிராக அரசாங்கம்வேண்டுமென்றே பாரபட்சம் காட்டி வருகிறது. விவேகானந்த சபை மட்டுமல்ல, வேறு பல இந்து சபைகளும் இப்பாரபட்சத்தை அகற்றும்படி கோரியிருந்தன. ஆனால் பாரபட்சமுங்காட்டிக்கொண்டு எந்த இந்து சங்கமும் பாரபட்சத்தை அகற்றும்படி அரசைக் கோரவில்லையென அமைச்சர் ஆணவத்தோடு கூறியிருப்பது வெந்த உள்ளத்தில் வேல் பாய்ச்சுவது போன்றதாகும்.

"பௌத்தர்கள் வடஇந்தியாவில் காஞ்சிவரை சென்று திரும்புகிறார்கள். இந்துக்களோ ரிஷிகேசம்வரை தரிசிக்க வேண்டிய பல தலங்கள் உண்டு. உண்மையில் இந்துக்களுக்கே அதிக பணம் ஒதுக்கப்பட வேண்டும்.

"அரசாங்கம் இனியாவது இப்பாரபட்சத்தை நீக்குகிறதா வென்பதை அறிய இந்துக்கள் ஆவலாக உள்ளனர்.

## புறக்கணிப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்கம் காட்டும் அலட்சிய மனோபாவமா? அல்லது கப்பற்துறை ஆணையாளரின் வடிகட்டிய வகுப்புவாத மனோபாவமா? என்ற கேள்வி இப்பொழுது எழுந்துள்ளது.

காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட ரூபா 20 இலட்சத்தில், ரூபா 8, 59, 276 வேறு துறைக்கென ஒதுக்கப்பட்டதாகவும், மீதி 11, 40, 724 ரூபா பயன் படுத்தப்படாமலிருந்ததாகவும், இத்தொகை செலவு செய்யப்படாமைக்கு "பொறித் தொகுதியும் சாதனத்தொகுதியும் கொள்வனவு செய்வதற்கான நிதி யேற்பாடு மதிப்பீடுகளிற் சேர்க்கப்பட்டிருந்தது. அந்நியச் செலாவணி கிடைக்கப்படாதனையினால் இவற்றை கொள்வனவு செய்ய முடியவில்லை" என கப்பற்துறை ஆணையாளர் விளக்கம் அளித்துள்ளதாகவும் கணக்குப் பரிசோதகர் தலைமை அதிபதியின் அறிக்கை கூறுகிறது.

"பொறித் தொகுதியும் சாதனத் தொகுதியும் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்த பணத்துக்கு அந்நியச் செலாவணி வழங்கும்படி உண்மையில் அரசாங்கத்திடம் கப்பற்றுறை ஆணையாளர் கேட்டுக் கொண்டாரா? எப்போது கேட்டார்? அல்லது வகுப்புவாத நோக்குடன் அலட்சியம் காட்டினாரா?

"அன்றேல் அரசாங்கம் தமிழ்ப் பகுதித் துறைமுக அபிவிருத்தி வேலையை அலட்சியப் படுத்தி இனப் பாகுபாடு நோக்குடன் உண்மையில் அந்நிய செலாவணி வழங்க மறுத்து விட்டதா? அல்லது அரசாங்கமும், கப்பற்துறை ஆணையாளரும் சேர்ந்து செய்த திட்டமிட்ட சதியா இது?" — இவ்வாறு தமிழ் மக்கள் கேட்கின்றனர்.

—

## நல்லவர் மறை...


(1ம் பக்கத் தொடர்ச்சி)

உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றபோது அம் மாநாட்டைத் தொடக்கி வைத்து, தமிழின் தொன்மைச்சிறப்புப் பற்றி சாகிர் ஹுசேன் ஆற்றிய பேருரை ஓர் வரலாற்றுப் பெட்டகமாகும்.

நல்லதையே எண்ணி, நல்லதையே செய்து எல்லோருக்கும் நல்லவராகவே வாழ்ந்து வந்த சிறந்த கல்விமானான சாகிர் ஹுசேன் உலகை விட்டுப் பிரிந்தாலும் அவர் கட்டி வளர்த்த உயர்ந்த பண்பாடு என்றும் நிலைத்து நின்று ஒளி விளக்காக வழி காட்டும் என்பதில் ஐயமில்லை.

அவரது ஆத்மா அமைதி பெறுவதாக!

—ஆ-ர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மா. சபை மசோதாவை கைவிடும்படி நாம் கூறியதில்லை"

# பிரதமருக்கு செல்வா சாட்டை!

"மாவட்டசபைகள் மசோதாவை வாபஸ் பெறும்படி தமிழரசுக்கட்சியே தம்மைக் கேட்டுக் கொண்டதாக பிரதமர் அரசாங்கப் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் கூறியது முற்றும் தவறானது. மாவட்டசபை மசோதாவை வாபஸ் பெறும்படி நாம் பிரதமருக்கு எக்கட்டத்திலும் ஆலோசனை கூறவோ, கோரிக்கை விடவோ இல்லை"

—இவ்வாறு தமிழரசுத்தந்தை திரு. சா. ஜே. வே செல்வநாயகம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

மாவட்டசபை மசோதாவை வாபஸ் பெறும்படி தமிழரசுக் கட்சிதான் தமக்கு ஆலோசனை கூறியதாக சென்ற வாரம் நடைபெற்ற அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரதமர் கூறியதாக செய்திகள் வெளிவந்திருந்தது தெரிந்ததே. இதற்குப் பதிலளித்து தமிழரசுத் தந்தை விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

திரு. செல்வநாயகம் விடுத்துள்ள அறிக்கை விபரம் வருமாறு:-

26ம் திகதி நடைபெற்ற அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பொதுமக்களின் அபிப்பிராயம் எதிராக இருந்த படியால்தான் மாவட்ட சபைகள் மசோதாவை கொண்டுவர முடியாமல் போனதாக பிரதமர் தெரிவித்திருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த அறிக்கை முழுவதும் சரியானது. அதற்கு எதிராக செயற்கையாக உண்டாக்கப்பட்ட பொதுமக்களின் அபிப்பிராயத்தைத் தொடர்ந்துதான் பிரதமர் அந்த மசோதாவைக் கைவிட்டார் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

நாட்டில் நிலவிய அரசியல் நிலைமை மசோதாவை கொண்டுவர சாத்தியமாக இருக்காதபடியால் தமிழரசுக் கட்சியே அதனை வாபஸ் செய்யுமாறு ஆலோசனை கூறியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மசோதாவை வாபஸ் பெறும்படி நாம் ஆலோசனை கூறியதாகவோ அல்லது வேண்டுகோள் விடுத்ததாகவோ பிரதமர் கூறியது சரியல்ல.

பல்கலைக் கழகப் பிரச்சினை பற்றி பிரதமர் கூறுகையில் தமிழரசுக் கட்சி தமிழ்ப் பல்கலைக் கழகம் வேண்டும் என்றும், தமிழ்க் காங்கிரஸ் இந்துப் பல்கலைக் கழகம் வேண்டும் என்றும் கேட்டதாகப் பிரதமர் கூறினாரெனத் தெரிய வருகிறது.

பிரதமருடன் பல்கலைக் கழகப் பிரச்சினை பற்றிப் பலமுறை கூடி தமிழரசுக் கட்சி பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளது. அந்தச்சமயங்களில் எல்லாம் பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக் கழகம் ஒன்று அமைத்துத்தர வேண்டும் என்றும், அது தமிழ் பேசும் பிரதேசத்தில் அதாவது திருகோணமலையில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடத்தில் அமைய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டோம்.



இந்த வேண்டுகோளைப் பிரதமர் ஏற்றார். பிரதமரின் அறிக்கையில் இதுபற்றிக் குறிப்பிடாததையிட்டு வருந்துகிறேன்.

---

# தமிழ் காங்கிரஸ் எம். பி. யின் அடிமைத்தனம்!

அண்மையில் வவுனியாத் தொகுதிக்கு உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர்: பிரேமதாசா இருநாள் விஜயத்தை மேற்கொண்டிருந்தார் அல்லவா? இவரின் விஜயத்தின் போது வவுனியாத் தொகுதியிலே, எட்டு இடங்களில் வரவேற்பும், வேறு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

இந் நிகழ்ச்சிகளை பார்க்கச் சென்றிருந்த பொது மக்கள் அனைவரும் வவுனியா பாராளுமன்ற பிரதிநிதி உதிர்த்த பச்சைப் பொய்களைக் கேட்டு வாயிலே கைவைத்து வியந்தனர். அது மட்டுமல்ல, இவரின் பேச்சைக் கேட்டுச் சகிக்காத பலர் உடனடியாகவே கூட்டத்தை விட்டு எழுந்து சென்றார்கள்.

அமைச்சரின் இரு நாள் விஜயத்தின் போதும், நடந்த சில சம்பவங்களை இங்கு திரட்டி தருகிறோம்.

### பாவற்குளம்:

இப்பகுதிக்கு உள்ளூராட்சி அமைச்சருடன் வவுனியா பா. உ. திரு. சிவசிதம்பரமும் கூடம் சென்றார். பாவற்குளம் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம். இப்பகுதிக்கு விஜயம் செய்யும் சிங்கள அமைச்சர்களைக் கூட ஒரு சில வசனம் ஆவது தமிழில் பேச வைக்கவேண்டியது பா. உ. வின் கடமை. ஆனால் அதற்கு எதிர்மாறாக இப்பகுதியில் வவுனியா பாராளுமன்ற உறுப்பினரே தமிழை மறந்து சிங்களத்தில் சொற்பொழிவாற்றினார், பின் அங்கிருந்த தமிழன்பர்களின் எதிர்ப்பைக் கண்டு தமிழில் சிறிது நேரம் பேசினார்.

அதே நேரத்தில் தமிழ் நன்கு தெரிந்தவரான அமைச்சர் தமிழில் ஒரு சொல் கூட பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### வவுனியா:

வவுனியாவில் புதிய நகராண்மைக் கழக அலுவலகத்தை அமைச்சர் திறந்து வைத்தார். அவ்வைபவத்திலே திரு. சிவசிதம்பரம் பேசுகையில் முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் எனது தொகுதிக்கு என்ன செய்தார்? அவரையும் வரவேற்றோம் பூ மாலை சூட்டினோம். புகழ் மாலை சூடினோம் ஆனால் எமது தொகுதிக்கு ஒரு சதமேனும் ஒதுக்கவில்லை என திரு. திருச் செல்வத்தைத் திட்டித் தீர்த்தார்.

ஆனால் அடுத்துப் பேசிய வவுனியா நகரசபைத் தலைவர் திரு. எம். பொன்னையா திரு. சிவசிதம்பரத்தின் வாதத்துக்கு கிழியக் கிழியப் பதிலளித்தார். திரு. திருச் செல்வம் அவர்களே இக் கட்டிடத்தற்கு ரூபா 50,000 ஒதுக்கினார் என்று அவர் கூறிய போது எம். பி. யின் முகத்தில் அசடு வழிந்தது.

### நெடுங்கேணியில்

அமைச்சர் நெடுங்கேணி கி. ச. அலுவலகத்தை திறந்து வைத்தார். இது 40, 000 ரூபா செலவில் கட்டப்பட்ட நவீன கட்டிடம். இதிலும் வவுனி எம். பி. வவுனியாவில் பேசியதையே பேசினார். அவர் மட்டுமல்ல, நெடுங்கேணி கி. ச. தலைவர் திரு. சி. உ. வல்லிபுரம் பேசும், தான் ஒரு கடமை வீரன் எனப் பலமுறை தன்னைதானே புகழ்ந்து கொண்டார். அத்துடன் நெடுங்கேணிக் கட்டிடத்திற்கு 1963 ம் ஆண்டு ஆடி மாதம் 23 ம் திகதி பணம் ஒதுக்கியதாகவும் இது எம். பி. யின் முயற்சியால் வந்தது எனவும் பச்சைப் பொய் சொன்னார் கி. ச. தலைவர். எம். பியும் அதற்கு ஆமாசாமி போட்டே பேசினார்.

ஆனால் இதற்கு திரு. திருச் செல்வத்தின் காலத்திலேயே பணம் ஒதுக்கப் பட்டது என்பதை எம். பி. யோ, கி. ச. தலைவரோ மறுக்கவும் முடியாது—மறைக்கவும் முடியாது என மக்கள் பேசிக் கொண்டனர்

இக்கூட்ட வைபவத்தில் ஒரு சில நிமிடம் சொற்பொழிவாற்றக் கேட்ட நெடுங் கேணி இளைஞன் ஒருவனுக்கு அதற்குப் பேச அனுமதி கொடுக்கப்படவில்லை.

> ### நெடுங்கேணித் தபால்

ஏன்? உண்மை வெளி வந்துவிடும் என்பதாலோ தெரியாது.

1965 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13 ம் திகதி அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வத்திற்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் சுமார் அறுநூறு பேருக்கு மேலான சனத்திரள் நெடுங் கேணியிலே கூடியது. ஆனால் திரு. பிரேமதாசாவிற்குஅளிக்கப்பட்ட இன் வரவேற்பில் பாடசாலை சிறுவர்களைவிட நாற்பது பேர் மட்டில் தான் நின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இதே போல சென்ற இடமெல்லாம் திரு. திருச்செல்வத்தை வவுனியா எம். பி. திட்டினாரே தவிர உண்மையைச் சொல்ல மறுத்து விட்டார்.

ஃ ஃ ஃ

நெடுங்கேணியில் வைத்து வவுனியா எம். பி. திரு. திருச்செல்வம் நெடுங்கேணிக்கு என்ன செய்தார் என்று கேட்ட கேள்விக்கு நெடுங்கேணி தமிழரசுப் பிரமுகர் திரு. த. ம. பீற்றர் பொன்கலன்ட் நமது நிருபரிடம் பதில் தெரிவித்தார்.

திரு. திருச்செல்வம் அவர்களின் உதவியால் நெடுங்கேணியில், தபால் நிலையம் உண்டாகியது.

வவுனியா வடக்கு காரியாதிகாரி பிரிவில் ஒரு பொலிஸ் நிலையம் உண்டானது.

குடி நீர் விநியோகத்திற்குப் பணம் ஒதுக்கியுள்ளார். (நெடுங்கேணி பெரிய கிணறு திருத்தல்)

நெடுங்கேணி கி. ச. கட்டிடத்திற்கு ரூபா 20 000 ஒதுக்கப்பட்டது.

1963 ஆம் ஆண்டு பொது நூல் நிலயத்திற்கென-ரூபா 10 000 ம் 1964 ஆம் ஆண்டு ஆயுர்வேத வைத்தியத்திற்கென 5 000 ரூபாவும் சேர்த்து மொத்தம் 40 000 ரூபாவில் இது கட்டப்பட்டது.

மொத்தம் எட்டுக் கோரிக்கைகளை தமிழரசுக் கட்சியின் நெடுங்கேணிக் கிளை திரு. திருச்செல்வம் அவர்களிடம் கோரியது. இதில் நாலு கோரிக்கைகளை மூன்று வருடங்களில் நிறைவேற்றி வைத்தார்.

### எம். பி. என்ன செய்தார்?

கடந்த 10 வருடங்களாக வவுனியா பிரதிநிதியாக பதவி வகிக்கும் சிவசிதம்பரம் எமது பகுதிக்கு என்ன செய்தார் எனப் பகிரங்கமாகக் கேட்டார் தமிழரசுப் பிரமுகர் திரு. த. ம. பீ. பொன்கலன்ட் அவர்கள்.

# பிரேமதாசாவுக்கு சிங்களத்தில் வரவேற்பு!

---

## கோணைநகர்த் தமிழன் இயக்கம்

தமிழுரிமை தடைப்படுவதை எதிர்ப்பது தீண்டாமை போன்ற பிற்போக்கு வழக்கங்களை நீக்குவது ஆகிய நோக்கங்களுடன் திருமலையில் அண்மையில் புதிய இயக்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அதன் நிகழாண்டுப் பணியாளர்கள் வருமாறு:—

தலைவர்: செ. நவசோதிராசா, செயலாளர்: க. கோணேஸ்வரன், பொருளாளர்: சி. கணேசரத்தினம்.

மற்றும் இளைக் குழுவினர், துணைத் தலைவர், துணைச் செயலாளர் போன்ற பிற [illegible] செய்யப்பட்டனர்.

### தடுப்புக்காவலில் நம்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சியின் கொள்கையில் தோய்ந்து திளைத்த நண்பர் லோலன் எழுதியுள்ள இக் கடிதங்கள் ஒவ்வொன்றும், ஈழத் தமிழினத்தின் விடுதலை வேட்கையை, அகில உலகுக்கும் உணர்த்தும் பெற்றிவாய்ந்தவை. உரிமை போராட்டத்தில் ஈடுபடப் போகும் தமிழினத்தவருக்கோ கைவாள் போன்றவை.

ஈழத் தமிழின விடுதலைப் போராட்ட வரலாற்றை சித்திரிக்கும் இந்நூலை வெளியிட்ட அன்பு வெளியீட்டினர் கொண்டு போற்றற் குரியது. இந்நூலை வாங்கிப் படித்து தமக்கும் தம் எதிர்கால சந்ததிக்கும் சுதந்திர உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு தமிழ் பேசும் மகனின் கடமையாகும்.

—மகேஸ்

---

## சமய அறிவுப் போட்டி

கோப்பாய்த் திருவருள் தவநெறி மன்றம் இவ்வாண்டும் வழமைபோல தனது சமய அறிவுப் போட்டியை நடத்த முன்வந்துள்ளது: போட்டி விதிகள். போட்டி வினாக்கள் அடங்கிய பத்திரத்தைப்பெற விரும்புவோர் பத்துசத முத்திரையுடன், ஆர். பி. ஹரன் கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு தொடர்புகொள்ளுமாறு தவநெறி மன்றம் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இலக்கிய வட்டத்தின் மூன்றாண்டுப் பணிகள்!

யாழ்வாணன்— செங்கை ஆழியான்

ஈழத்து எழுத்தாளர்களிடையேயும் வாசகர்களிடையேயும் என்றுமில்லாதவாறு புத்துணர்வையும் விழிப்புணர்ச்சியையும் கடந்த மூன்று ஆண்டு காலமாக ஏற்படுத்தியுள்ளமை குறித்து யாழ். இலக்கிய வட்டம் பெருமையடைகின்றது. எமது விடா முயற்சியின் பயனுக மக்கள் மத்தியில் இன்று வலுப் பெற்றுள்ள 'எங்கள் நாடு; எங்கள் எழுத்தாளர்கள்; எங்கள் நூல்கள்' என்ற தேசிய மனப்பான்மைக் கொள்கை வேரோடியுள்ளதை யாவரும் உணர்வர்.

வாழும் இலக்கியத்தைப் படைத்தல், படைப்பவர்களை ஊக்குவித்தல் என்ற இவ்வளவில் எமது இலட்சியம் நின்றுவிடவில்லை. எமது நாட்டு இலக்கியத் திறனை எடுத்தியம்ப பொதுமக்கள் மத்தியில் இலக்கிய இரசனையை வளர்ப்பதுவும் எமது முக்கிய குறிக்கோள்களில் ஒன்ருகும்.

கிராமப் புறங்களில் இலக்கிய கூட்டங்களை நடாத்தியும், எமது ஆற்றல் வாய்ந்த உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் பிற விழாக்களில் ஈழத்து எழுத்தாளர்களின் பெருமையை வலியுறுத்தியும் இந் நோக்கத்தைத் தக்கவாறு செயற்படுத்தி வந்துள்ளோம்.

இதன் பெறுபேருக, பொதுசன நூலகங்கள் கல்லூரி நூலகங்கள் ஆகியவற்றில் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் இடம்பெற்றிருப்பதுடன், வாசகர்களின் நல்லாதரவையும் அவை பெற்றுள்ளன. கல்லூரி அதிபர்கள் பரிசளிப்பு விழாக்களில் எமது எழுத்தாளர்களின் படைப்புகளை வாங்கிப் பரிசளித்து வருகின்றமையைச் சிறப்பாக குறிப்பிட விரும்புகிறேம்.

மேலும், எமது எழுத்தாளர்கள் சிலரின் படைப்புகள் சிலவற்றைப் பிற நிறுவனங்கள் தங்கள் செலவில் வெளியிட்டிருப்பது ஈழத்து இலக்கிய உலகில் திருப்புமுனையாக அமைந்துள்ளது. ஈழத்து எழுத்தாளர்களது நூல்கள் அமெரிக்க நூல் நிலையங்களுக்கு இங்குள்ள அமெரிக்க தகவற் பகுதியினரால் அனுப்பப்பட்டுள்ளன. ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களில் தமிழ் நாட்டவரும் பெரும் அக்கறை என்றுமில்லாத அளவுக்குக் காட்டத் தொடங்கியுள்ளனர். தமிழ் நாட்டில் அண்மையில் வெளியிடப்பட்ட "அக்கரை இலக்கியம்" என்னும் நூல் ஓர் அவசரப் படைப்பேயாயினும் தமிழ் கூறும் நல்லுலகங்களுக்கிடையே இலக்கியப் பரிமாறலுக்கு ஒரு பாலமாக அது அமைவது குறித்து அதனை வெளியிட்ட தமிழ் நாடு வாசகர் வட்டத்துக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்ருேம்.

சிங்கப்பூர், மலாயா எழுத்தாளர்களுட் சிலரும் எம்முடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளனர். இந்நிலை மேன்மேலும் விருத்தியாகவும், எமது நாட்டு நூல்கள் தமிழ்நாட்டில் விற்பனை செய்யவும் ஒழுங்குகள் செய்யப்பட வேண்டுமெனத் தமிழ் நாட்டு அரசினருடனும் மற்றும் தலைவர்களுடனும் தொடர்பு கொண்டுள்ளோம்.

கடந்த மூன்று ஆண்டு காலத்தில் பத்து நூல்களை வெளியிட்டுள்ளோம். சென்ற ஆண்டு வெளியிடுவதாக விருந்த சில நூல்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் வெளியிட முடியவில்லை. செங்கைஆழியானின் நந்திக் கடல், ஆச்சி பயணம் போகிறுள் என்னும் இரு நூல்களை மூன்ருண்டு விழாவில் மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்ருேம்.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில், திரு. காரை செ. சுந்தரம்பிள்ளையின் 'சங்கிலியம்' (காவியம்). திரு. வி. கந்தவனத்தின் 'மெய்யோ இதுவும் மேதினிதானே' (கவிதை). திரு. ஏ. ரி. பொன்னுத்துரையின் 'நாடகம்' (ஓரங்க நாடகம்). இரசிகமணி கனக. செந்திநாதனின் 'எமது நாடு—எமது நூல்கள்' (தொகுப்பு), யாழ்வாணனின் 'அமரத்துவம்' (சிறுகதை), திரு. இ. நாகராஜனின் 'தலைவன் தாளில்' (உருவக நாடகம்), செங்கை ஆழியானின் 'கங்குமட்டை', திரு வே. குமாரசாமியின் 'மணிவிளக்கு' (கவிதைத்தொகுப்பு) 'தாகம்' (காவியம்) ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

---

# சங்கப் பலகை

## தடுப்புக்காவலில் நாம்

**ஆசிரியர்:- புதுமைலோலன்.**

**வெளியிட்டவர்கள்: அன்பு வெளியீடு 27 டி. பெரிய கடை, யாழ்ப்பாணம்**

**விலை:- ரூபா 2-00**

அடிமைப்பட்ட ஒரு இனம் தனது விடுதலையை மீண்டும் எப்போது பெறும் என்பதை யாரும் திட்டமிட்டுச் கூறிவிட முடியாது. ஒரு இனத்தின் விடுதலைப் போராட்டம் சில பல ஆண்டுகளில் வெற்றியடையவும் கூடும்; சில சமயங்களில் பல தலைமுறைகளுக்கு சுதந்திரப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வெற்றி காண வேண்டியும் ஏற்படும். அயரிஷ் மக்கள் மூன்று நூற்ருண்டுகளாக விடாப்பிடியாகப் போராடியே அயரிஷ் சுதந்திரத்தைப் பெற்றனர் என்பது வரலாறு கூறும் உண்மை.

காலத்துச்குக் காலம் நடைபெற்ற போராட்ட வரலாறுகள், சுதந்திரப் போராட்டத்திலீடுபட்டிருக்கும் இனத்துக்கு புதிய நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தக் கூடிய சக்திவாய்ந்தவை. அத்தகைய வரலாறுகளைப் படிக்கும் இளம் சந்ததியினர் மனதில் களைப்பேற்படாமல் சோர்வு தட்டாமல் சுதந்திரப் போரில் ஈடுபடுவர்.

ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் சிங்களப் பெரும்பான்மை யினத்துக்கு அடிமையாக்கப் பட்டுவிட்ட ஈழத் தமிழ் நாட்டு மக்களின் சுதந்திரப் போராட்டம் தமிழரசுக் கட்சியென்னும் விடுதலை இயக்கத்தின் தலைமையில் 1956 ம் ஆண்டு ஆனி 5 ந் திகதி ஆரம்பமாகியது. இப் போராட்டம் 1965 வரை தொடர்ந்தது; 1965 ம் ஆண்டு அரசியல் நிலையில் ஏற்பட்ட மாறுதல் காரணமாக தற்காலிக



மாக நிறுத்தி வைக்கப்பட்டது. இப்போது மீண்டும் போராட்டக் குரல் ஒலிக்க ஆரம்பித்து விட்டது.

இது வரை நடந்த ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டங்களில் மறக்க முடியாத போராட்டம் 1961 ம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் கச்சேரி வாசல்களின் முன்பு இரு மாதமாக நடைபெற்ற சத்தியாக் கிரகப் போராட்டமாகும். சிங்கள ஆட்சியையே நிலை குலையவைத்த இப் போராட்டம் இறுதியில் மிருகத்தனமான இராணுவ பலம் கொண்டு நசுக்கபபட்டதுடன் போராட்டத்தில் கலந்து கொண்ட பலர் தடுப்புக் காவலில் 100 நாட்களுக்குமேல் வைக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர்தான் ஆசிரியர் திரு. புதுமைலோலன்.

தடுப்புக் காவலில் இருந்த போது தாம் அடைந்த அனுபவங்களை யெல்லாம், பண்டிதர் நேரு மகள் இந்திராவுக்கு எழுதிய பாணியில் தனது அன்புமகள் அன்பரசிக்கு எழுதுவதுபோன்று கடித வடிவில் 25 கடிதங்களாக வடித்து தந்திருக்கிருர் நண்பர் லோலன். (இக் கடிதங்கள் ஏற்கெனவே சுதந்திரனில் வெளிவந்தது வாசகர்களுக்கு நினைவு இருக்கும்.)

திரு. புதுமைலோலன் அவர்கள் தமக்கேயுரிய கோணழையையும் வீரனுக்குக் கூடிய விறுவிறுப்பான தமிழில், 1961 ம் ஆண்டு கச்சேரி சத்தியாக்கிரகம்—அது தொடங்குவதற்கான காரணங்கள் மட்டுமன்றி-அதற்கு முன் நடைபெற்ற போராட்ட வரலாறுகளையும் ஆங்காங்கே இணைத்ததுடன், தமிழரசுக் கட்சியினதும் அதன் தலைவர்களினதும் பண்புகளையும் கொள்கை கோட்பாடுகளையும் கூட இந் நூலில் சிறப்புற எடுத்துக் கூறியிருக்கிருர்.

(10ம் பக்கம் பார்க்க)

---

# எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு

(2ம் பக்கத் தொடர்ச்சி)

போது நடந்து கொண்டிருந்தது. அவள் கண்ணீரை அவன் தன் கையால் துடைத்து விட்டு அவளைப் பார்த்தபடி மௌனமாக நின்ருன். எந்த ஒரு பெண்ணும் தனது முதற் குழந்தையை, தங்கள் அன்பின் சின்னத்தைக் கணவன் கண்டு களிக்க வேண்டுமென்று தான் விரும்புவாள். அந்தப் பாக்கியம் கிடைக்காத போது அழவேண்டாம் என்று கூறுவது தவறு என நினைத்து அவன் சிறிதுநேரம் அவள் சோகம் தீரும்வரை அழவிட்டான்.

'அவள் அழுகை ஓரளவு ஓய்ந்ததும் தங்கச்சி' என்றழைத்தான். அவள் அவனைப் பார்த்தாள். உன் குழந்தைக்கு 'உமா சுதன்' என்ற பெயரைச் சூட்ட ஆசைப்படுகிறேன். அந்தப் பெயர் உனக்குப் பிடிக்குமா என்று கேட்டபோதே அவன் சிந்தனை எத்தனையோ மைல்களைக் கடந்து உமாவிடம் விரைந்து கொண்டிருந்தது. 'எங்கே நீயோ நானும் அங்கே' என்ற பாட்டை அவன் பாடும்படி அவளைக் கேட்பது போன்றதோர் பிரமை!. உமா நான் எங்கிருந்தாலும் நீ என்னுடனேயே இருப்பாய். இனி இந்த உமாப் பயலில் உன்னைக் காணப்போகிறேன். உன்னுடன் பேசப் போகிறேன்! உமா! உமா! என ஆயிரம் முறை அன்பொழுக அழைக்கப் போகிறேன். இந்த அழைப்புக்கு இனி யாருமே தடைபோட முடியாது. யாரும் என்னைப் பைத்தியம்என்று எள்ளி நகையாடமுடியாது. இனி உமா என் ம[illegible]லும் தோழிலும் அணைந்து [illegible]யாடப்போகிருன் என்று அவன் தனக்குத் தானே கூறிக் கொண்டபோது 'அண்ணு' என்றழைத்தாள் பவானி.

குழந்தையையே உங்களுக்கு உரிமையாக்கி விட்டபின் இதென்ன கேள்வி. இவனை 'உமாசுதன்' என்றே அழையுங்கள். நிர்மலா மிஸி கூட இவனுக்கு என்ன பெயர் வைக்கப் போகிருய் பவானி என்று சிறிது நேரத்திற்கு முன்புதான் கேட்டாள். அண்ணுவின் விருப்பம்போல் வைக்கட்டும் என்றேன். உன் அண்ணு என்ன பெயர் வைக்கப் போகிருர் என்று பார்ப்போமே என்றுகேலிசெய்தாமிஸி. குழந்தைக்குக் கூட உடைகள் எல்லாம் தைத்து வைத்திருக்கிரு அண்ணு. உமாவுக்கு இப்போ போட்டிருப்பதுகூட மிஸி கொண்டுவந்ததுதான் என்று அவள் கூறியபோது ரகுவால் எதுவுமே பேசமுடியவில்லை.

நிர்மலா எதற்காக இப்படியெல்லாம் செய்கிருள் என்று அவன் சிந்தித்தான். வேறு எந்த ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு [illegible] அக்கறை இவனுக்[illegible] எதற்காக வரவேண்டும் என்பது இன்னும் அவனுக்கு மர்மமாகவே இருந்தது. நிர்மலா ஏதோ ஒரு நோக்கத்தோடுதான் இதையெல்லாம் செய்கிருள் என்பது அவனுக்கு நன்ருகப் புரிந்தது. அந்த நோக்கங்கூட அவனுக்குச் சாடையாகத் தெரியத்தான் செய்தது. வீணுக ஒரு அபலைப்பெண்ணின் மனதில் அளவற்ற ஆசைகளை வளர்க்க அவன் இடங்கொடுக்க விரும்பவில்லை. அவனது ஆசையை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடத்தான் அவன் துடித்தான். ஆனல் அதை எப்படிச் சொல்வது என்பதுதான் அவனுக்குப் புரியவில்லை. எது வந்தாலும் இன்னும் இரண்டொரு நாட்களில் நிர்மலாவிடம் மனம்விட்டுப் பேச வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டான்.

"என்னண்ணு அப்படியே நிற்கிறீர்கள் மிஸிஉடைகள் கொண்டு வந்தது உங்களுக்குப் பிடிக்க வில்லையா"...? என பவானி தொடர்ந்து கேட்டபோது ரகு திடுக்கிட்டான். 'இல்லைத் தங்கச்சி அவர்களுக்கு எதற்காக வீண் சிரமம் என்றுதான் சிந்தித்தேன். ஆமாம்! உன்ர மிஸி நான் ஏன் இன்னுந் திருமணஞ் செய்யவில்லை என்று கேட்கவில்லையா...? என்று [illegible] சொல்லப் போகிருளென எதிர் பார்த்தான்.

அவனைப் பார்த்து பவானி சிரித்தாள். சிலநாட்களுக்கு முன்பு என்னிடங் கேட்டவ அண்ணு. திருமணஞ் செய்து கொள்ள உங்களுக்குப் பிரியமில்லை என்கிறேன் சுருக்கமாக'.

'தங்கச்சி உன் குழந்தைக்கு ஏன் 'உமாசுதன்' என்று பெயர் வைத்தார் உன் அண்ணு என்று திரும்பவும் மிஸி கேட்டால் நான் ஆரம்பத்தில் ஒரு பெண்ணைக் காதலித்துத் தோல்வி கண்டதாகவும் அதனலேயே அவளுடைய பெயரை அவள் ஞாபகமாக உன் குழந்தைக்கு வைத்ததாகக் கூறு... என்று ரகு கூறிமுடித்தபோது நிர்மலா உள்ளே வந்துகொண்டிருந்தாள்.

என்ன பவானி...உன் குழந்தைக்கு பெயர் வைத்துவிட்டாச்சா...நான் பெயர் பதிய வேண்டும். உன் அண்ணுவுக்கு என்ன பெயர் பிடித்திருக்காம்...'

'உமாசுதன்' என அவள் கேள்விக்கு பவானி பதில் கூறியபோது சுருக்கமாக 'உமா' என்றே அழைப்பதாக உத்தேசம் என்ருள் ரகு. அதன் பொருளை உணராதவள்போல் ரகுவைப் பார்த்தாள் அவள்.

—தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2வது வாரமாக காட்சியளிக்கிறது!


செல்லமகால் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) இம்பீரியல் (மட்டுநகர்) நெல்சன் (திருமலை) றீகல் (நீர்கொழும்பு) தாஜ்மகால் (மாத்தளை) ஸ்ரீமுருகன் (வவுனியா)

(மூன்றுவது வாரம்) வின்சர் (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், ஜெயலலிதா, ஏ. வி. எம். ராஜன், நாகேஷ், தங்கவேலு, சோ, மனோரமா, வி. கோபால கிருஷ்ணன் சச்சு, ஜோதிலட்சுமி, ராஜேஸ்வரி, சுந்தரிபாய், வி. எஸ். ராகவன்,

—நடிக்கும்—

## கலாட்டா கல்யாணம்



# இப்பொழுது அமோக வெற்றியுடன் காட்சியளிக்கின்றது!!



சென்ட்ரல் (மருதானை) ராஜேஸ்வரா (மட்டுநகர்) ஜோதி (திருமலை)

ஆகிய திரைகளில்

* ஜெய்சங்கர் * விஜயநிர்மலா * நாகேஷ், * முத்துராமன் * கிருஷ்ணகுமாரி * நம்பியார் * எஸ். வரலட்சுமி * வி. எஸ். ராகவன், * சகுந்தலா * ராதாபாய் மற்றும் பலர் நடித்த,

அமர்ஜோதி மூவிஸ்
'இயக்குநர்திலகம்' கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்.

## உயிரா? மானமா?

கதை-வசனம்—டைரக்ஷன் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்,
இசை: 'மெல்லிசை - மன்னன்' எம். எஸ். விஸ்வநாதன்

# செவ்வாய் 6 திகதி முதல்



கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு)
விஜாயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)

ரவிச்சந்திரன், காஞ்சனா, மாதவி, நாகேஷ், அசோகன். நடித்த

## அதே கண்கள்

(ஈஸ்மன் கலர்)

5வது வாரம் — கிங்ஸ்லி

## சந்திரோதயம்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969-ம் வருட மே மாதம் 8-ந் திகதி வியாழக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி: 23411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org